பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 12 ஞாயிற்றுக்கிழமை (30.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 304

# சகல இன மக்களுக்கும் ஏற்புடைய அதிகாரப் பங்கீட்டுடன் அரசியல் தீர்வு

## ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய நிலைப்பாடு

கொழும்பு, செப்ரெம்பர் 30

சகல இன மக்களுக்கும் ஏற்புடைய அதிகாரப் பங்கீட்டு முறையிலான அரசியல் தீர்வு ஒன்றே காணப்படவேண்டும் என்றும் - முடங்கிப்போயுள்ள சமாதானப் பேச்சுக்களை மீளத் தொடங்குவதற்கு இந்தியாவினதும் இணைத் தலைமை நாடுகளினதும் உதவி பெறவேண்டும் என்றும் - ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. கட்சி நேற்று வெளியிட்ட விசேட அறிக்கையில் இவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேற்படி கட்சி தனது அரசியல் நிலைப்பாட்டை - விசேடமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது - குறித்து வெளியிட்ட அறிக்கையில் - எதிர்பார்க்கப்பட்டது போன்று சமஷ்டி முறை அரசியல் தீர்வு முறைக்கு முழுக்குப் போடப்பட்டுள்ளது. அதிகாரப்பகிர்வு பற்றித்தானும் அதில் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை.

நேற்று வெளியிட்ட பத்து அம்ச விசேட உத்தியோகபூர்வ அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

* நிரந்தர சமாதானத்தை அடைவதற்கு அனைத்து இன மக்களுக்கும் ஏற்புடைய விதத்தில் அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்வதை அடிப்படையாகக் கொண்ட அரசியல் தீர்வு ஒன்று பேச்சு வார்த்தை மூலம் வகுக்கப்படவேண்டும்

* அந்த அரசியல் தீர்வு தமிழ் மக் களுக்கு உள்ள பிரச்சினைகளையும் வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ள இனச்சுத் திகரிப்புக் குறித்த அச்சத்தையும் அதிகாரப் பகிர்வு பிரிவினைக்கு வழிசெய்யும் என்ற சிங்கள மக்களில் சிலருக்குள்ள அச்சத்தையும் நீக்குவதாக அமையவேண்டும்.

* போர்நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்து மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்ப தற்கு வகை செய்யுமாறு இணைத் தலைமை நாடுகளிடமும் இந்தியாவிடமும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

* வடக்கு - கிழக்கின் இப்போதைய நிலையை கவனத்திற்கொண்டும் கடந்த சில வருடங்களாக உண்டான அனுபவங் களைக் கொண்டும் போர் நிறுத்த ஒப்பந்தம் திருத்தி அமைக்கப்படவேண்டும். 2002ஆம் ஆண்டில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தான போது இருந்த சூழ்நிலை இப்போது பெரிதும் மாற்றம் அடைந்து விட்டது.

* சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ் லிம் மக்களின் தூதுக்குழுவும் பங்குபற்ற வேண்டும்.

* விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதோடு ஏனைய சகல கட்சிகளுடனும் குழுக்களுடனும் பேசவேண்டும்.

* பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் போது இந்தியாவுடனும் சர்வதேச சமூகத்துடனும் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கவேண்டும்.

* அரசியல் தீர்வு அனைத்துச் சமூக மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமைய வேண்டும்.

* அரசியல் தீர்வானது இலங்கையின் ஆள்புலத்தையும் மக்களின் இறைமை யையும் பேணிப்பாதுகாப்பதாகவும் அமைய வேண்டும். அது சிறுபான்மை இன மக்களினது உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் அமையவேண்டும்.

இத்தகைய ஒரு தீர்வை உள்ளடக்கி எங்களது அனுபவத்தினைப் பிரதிபலிப்பதாக புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கவேண் டும்.

* பேச்சுவார்த்தை மூலம் எட்டப்படும் தீர்வு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீகரிக்கப்படவேண்டும்.

- அதன் பின்னர் தீர்வை உள்ளடக்கிய தாக அரசமைப்புத் திருத்தப்படவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பஸிலை பிரதமராக்குவதற்கு உள்ளே இரகசியத் திட்டமாம்

கொழும்பு, செப்.30

நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்று, விரைவில் அமைச்சராக பதவியேற்கவிருக்கும் பஸில் ராஜபக்ஷவை பிரதமராக்கும் இரகசியத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படுகிறதாம்

சிங்கள வார ஏடு ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. அடுத்த ஆறு மாத காலத்துக்குள் இத்திட்டத்தை செயற்படுத்த முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது பிரதமராகவிருக்கும் ரட்ணசிறி விக்கிரமநயக்கவை சுய விருப்பின் பேரில் பிரதமர் பதவியில் இருந்தும் தேசிய பட்டியல் எம்.பி பதவியில் இருந்தும் விலகச்செய்விப்பது. அதன் மூலம் ஏற்படும் வெற்றிடங்களுக்கு பஸில் ராஜபக்ஷவை பிரதமராகவும், மஹிந்தவின் மகன் நாமல் ராஜபக்ஷவை நாடாளு மன்ற உறுப்பினராகவும்நியமிப்பது. இதற்கான திட்டம் வருக்கப்பட்டுள்ளதாக அப்பத்திரிகை வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-1)

## அரசும் புலிகளும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்

### மன்னார் ஆயர் வேண்டுகோள்

மன்னார்,செப்.30

நாட்டில் உயிரிழப்புகள் தொடர்ந்தும் ஏற்படாமல் இருப்பதற்கு விடுதலைப் புலிகளும் இராணுவத்தினரும் வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வரவேண்டும். மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை மேற்கண்ட வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வெள்ளாங்குளம் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் கொலையுண்ட அருட்தந்தை பாக்கிய ரஞ்சித்தின் கொலைக்கு யார் காரணம் என்பதை கண்டறிவதை விடுத்து தொடர்ந்தும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதற்கு இரண்டு தரப்புக்களும் உறுதி செய்யவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூதூர் கிழக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர இப்போதைக்கு அனுமதி இல்லை

### படைத்தரப்பு திட்டவட்டமாக அறிவிப்பு

மட்டக்களப்பு,செப்.30

அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ள மூதூர் கிழக்கு, சம்பூர் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்க முடியாது என்று படைத்தரப்பு திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து மட்டக்களப்பில் தங்கியுள்ள மக்கள் ஒன்று சேர்ந்து அமைத்துள்ள இடம் பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்துக்கே இந்தத் தகவலை படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

அதிஉயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்பட்டாலும், தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து வாழ்வதற்கு அனுமதிக்குமாறு குறிப்பிட்ட சங்கம் கிழக் குப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் பராக் கிரம பன்னிப்பிட்டிய விடம் கடிதம் மூலம் கோரியிருந்தது.

அதற்குப் பதில் அளித்துள்ள தளபதி, அதியுயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் மீளக் குடியமர இப்போதைக்கு அனுமதிக்க முடியாது. காலத்துக்கு காலம் கள நிலை குறித்து ஆராய்ந்து மீளக் குடியமர அனுமதிப்பது குறித்துப் பரிசீலனை செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளார். (அ-1)

## ஊரடங்கு வதந்தியில் உண்மை இல்லை!

யாழ்ப்பாணம், செப் 30

குடாநாட்டில் இன்று பகல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று நேற்றுப் பரவிய வதந்தியில் எவ்வித உண்மையும் இல்லை.

பலாலி படைத் தலைமையக ஊடகப் பிரிவு நேற்றிரவு இவ்வாறு தெரிவித்தது.

விசேட அடையாள அட்டைக்கான படிவங்கள் வழங்கும் பணி இன்று வீடு வீடாக இடம்பெறும். ஆதலால் அதன் பொருட்டு ஊரடங்கு நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை எதுவும் இல்லை.

படிவத்தைக் கையளிப்பதற்காக வீட்டின்

(12ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விரைவான தேடல்

பெண் ஆண்

------- சமயம் -------

-------- நாடு --------

வயது 18 இடை 35

படத்துடன் கூடிய

வி வா க ம்



கும்பம்.com
Kumbam.com

## 'யு[illegible]னிகுளோரி' கப்பலில் உணவுப்பொருள்கள்

உலக உணவுத்திட்ட விநியோகத்துக்கான உணவுப் பொருள்களுடன் 'யுனிகுளோரி' கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

அரிசி,சீனி, பருப்பு, கோதுமை மா உட்பட ஆயிரத்து 900 மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் இந்தக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன. பொருள்களை இறக்கும் பணி தற்போது நடைபெற்று வருகின்றன. (50)

## முக்கிய அறிவித்தல்

Guidance International Pvt.Ltd. நிறுவனத்தோடு இணைந்த செல்வி ஹனா, செல்வன் ராகுல் ஆகியோருக்கு 25.09.2007 லிருந்து எமது நிறுவனத்தோடு எவ்வித தொடர்பும் இல்லை என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

முகாமைப்பணிப்பாளர்
Guidance International Pvt.Ltd.
18/01,1st Lane,Jambugasmulla Road,
Nugegoda

## குறும்படங்களின் காட்சி

I 'கால்'
(அசாதாரண சூழ்நிலையில் சாதாரண மனிதர்களின் கதை)
II 'வெட்டை'
(சாதாரண சூழ்நிலையில் அசாதாரண மனிதனின் கதை)

காலம் - நாளை (01.10.2007 )திங்கட்கிழமை பி.ப. 1.30 மணி
இடம் - கைலாசபதி கலையரங்கு, யாழ். பல்கலைக்கழகம்.

வெறு வெளி அரங்கக் குழு
நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

**பிரவேசம் - 100/=, 50/=**

விளம்பர அனுசரணை - **"Com- e"**
சகலவிதமான போட்டோ பிரதி இயந்திரங்கள் அதன் உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையம்
இல.222, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0773867790
(66315)

## ஆசிரியர் வே. அன்பழகன் அவர்களின் புலமைப் பரிசில் பரிசில் பரீட்சை - 2008

வகுப்புகள் ஆரம்பமாகின்றன

**அன்பொளி கல்வியகம்**

யாழ் இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

ஆரம்பம் :- இன்று(30.09.2007)ஞாயிற்றுக்கிழமை
காலை 8.00 - 10.00 பிரிவு I
காலை 10.00 - 12.00 பிரிவு II
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- இயக்குநர்
(அ/53847)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் **சு.செந்தூரனின்**
(முன்னாள் விரிவுரையாளர், IT Park
தற்போதைய Training officer, MDTD)
அவர்களின் தந்தை

**கந்தவனம் சுந்தரலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முன்னாள் விரிவுரையாளர்கள்,
IT park, Jaffna
(66348)

## மரண அறிவித்தல்கள்

செல்வன்

### பாலசுப்பிரமணியம் சனாதன்(சனா)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் சனாதன் 29.09.2007 அன்று அகாலமரணமடைந்து விட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

'கமலாம்பிகை பவனம்'
இணுவில் மேற்கு , இணுவில்.
0777079194

தகவல்
குடும்பத்தினர்.

### மாணிக்கம் ரவிராஜா



மலேசியாவை பிறப்பிடமாகவும், மானிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் ரவிராஜா (28.09.2007) வெள்ளிக்கிழமை அன்று மலேசியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் பூபதி தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் யசோதவின் அன்புக் கணவரும் மயூரி, அனித்தா ஆகியோரின் அன்பு தந்தையும்பரமேஸ்வரியின் அன்புச் சகோதரனும் சற்குணத்தின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 29.09.2007 மலேசியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.
தொ.பே:- 0779074089

தகவல்
யசோதா(மனைவி)
மயூரி, அனித்தா
(பிள்ளைகள்).
(66386)

## Spoken English

Spoken English CDகள் Learning English CD கள் மிகக் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு.

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

## படிவம்

1. மாணவ தாதிமார் பயிற்சி - 2007- தமிழ்மொழி மூலம் (வடமாகாணம்)
முடிவுத் திகதி :27.10.2007
2. இலங்கை உயர்தொழில் நுட்பக்கல்வி நிறுவனம் (SLIATE) - 2008 கல்வி ஆண்டுக்கான அனுமதி
முடிவுத்திகதி: 26.10.2007

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை,நல்லூர்.

## புறொயிலர் விற்பனைக்கு

சுத்தம் செய்த புறொயிலர் 1 KG 600/= மட்டும்.

**குமரன் பாம்,**
227, பிறவுண் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.

## கோழி இறைச்சி விற்பனை

புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச்சேவல் என்பன வேண்டிய அளவுகளில் மிக மலிவான விலைகளில் எந்தநேரமும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு : மல்ரிபாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
கிளை : சுவாமியார் வீதி, அந்தோனியார் கோயிலடி, கொழும்புத்துறை.

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1970 ஆம் ஆண்டு, அத்த நட்சத்திரம் 4ஆம் கால், கிரகபாவம் 72 மொத்தம், செவ்வாய் 32 (உதயத்துச் செவ்வாய்) மணமகன் லண்டனில் உள்ளார். லண்டனின் பிரஜா உரிமை உடைய பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள்

தொடர்புகளுக்கு :
தொ.பே.: 0602214432

## DATA CENTRE

115, SADDANATHAR Rd.,
NALLUR, JAFFNA.

**Computer Courses**
**O/L, A/L Classes**
**on Special fees**
*Start On 10.10.2007*
*Visit For Details*
*8.30 am - 2.30 pm*

## காணி விற்பனைக்கு

இல.94, நாவலர் வீதியில் (சோனகத் தெரு) 1 ¾ பரப்பு காணி கிணறு மற்றும் தென்னை மரங்களுடன் உடன் விற்பனைக்கு

தொடர்பு: 0716208730,
0713252325
அல்லது குறிப்பிட்ட காணிக்கு முன் வீட்டை தொடர்பு கொள்ளவும்.
(66332)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் றோட்டில் 3 பரப்பும் 15 குழியும் அடங்கிய காணி சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
தேவசேனாதிபதி
S.T. மெடிக்கல்ஸ்,
490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[illegible] 2225119

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை செல்லத்துரை (கிளாக்கர்)

(அச்சுவேலி மத்திய கல்லூரி-முன்னாள் ஆய்வுகூட உதவியாளர்)



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் வவுனியா ஆசைப்பிள்ளையார் குளத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் (27.09.2007) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் மற்றும் இராசம்மாவின் பாசமிகு கணவரும் இராசதுரையின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கதிரவேலு மற்றும் துரைராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாந்தகுமாரி, சாந்தகுமார், இராசகுமார், தேவகுமாரி, சந்திரகுமாரி, பிரியகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரசிங்கம் விஜேஸ்வரி, ஜெனார்த்தனி, சசிதரன், முரளிதரன், தயாவினோத் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவீணன், மதுஷா, தூயவன், சாமிலன், அபிலாஷ், அட்சரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு நாளை (01.10.2007) திங்கட்கிழமை காலை 8 மணிக்குத் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

ஜதாஸ் உணவகம்,
பஸ் நிலையம், அச்சுவேலி.
(அ/53850)

தகவல்:
இ.மகாதேவன்

### துரைரத்தினம் ஸ்ரீ கனகசபேசன்

(ஆசிரியர், ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி - புத்தூர்)



வளலாயைப் பிறப்பிடமாகவும், பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீ கனகசபேசன் 27.09.2007 வியாழக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ் சென்ற வளலாய் துரைத்தினம் (கிராமத் தலைமைக்காரர்) - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் மல்லிகாதேவியின் பாசமிகு கணவரும் சந்திரகுமார், திருக்கேதீஸ்வரன், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகேஸ்வரி, ராஜவினோதினி, புஸ்பராணி, தவமணிதேவி, அன்னலட்சுமி, சற்குணநாதன், வரதராஜன், அன்னரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், கந்தசாமி கதிர்காமநாதன், நேசரத்தினம், தங்கமணி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் சிவப்பிரியன், சுகப்பிரதா, தசாருதன், சுரேஸ்குமார் (ஜேர்மனி), கவிதா (லண்டன்), சுகன்யா (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய தந்தையும் மதியழகன் (லண்டன்), றேனுகாந் (ஜேர்மனி), சுஜாதா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும் வைஸ்ணவி; பிரணவி, சங்கவி, அரவிந்தன், கருணி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பத்தமேனியில் உள்ள இல்லத்தில் இன்று (30.09.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்நிதி வீதி, பத்தமேனி,
அச்சுவேலி.
(அ/53851)

தகவல்
து.சந்திரகுமார்
(சகோதரன்)

### நாகலிங்கம் விஜயரத்தினம்



தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் விஜயரத்தினம் 27.09.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரிமளத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும் காலஞ்சென்ற பஸ்தியாம்பிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் மருமகனும் குணபாலா B.A (கலாசார உத்தியோகத்தர், திருகோணமலை), ஜெயந்தி, கணேசலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிகலா B.A (ஆசிரியர், திருகோணமலை), மனோகரன் (டோகா), தயாளினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ரம்மியா, ராகவன், ஜெகஜெனனி, துவாரகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2007) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொல்புரம் மத்தி
சுழிபுரம்.

தகவல்:
குணபாலா (மகன்),
கணேசலிங்கம் (மகன்), ஜெயந்தி (மகள்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய், பதவியா நகரங்கள் தமிழரின் பூர்வீகப் பிரதேசங்களே!




கடந்த 08.09.2007 அன்று உதயனில் பாவற்குளம் (பதவியா) கந்தளாய் போன்ற தமிழர்களின் பூர்வீக நிலங்கள் திட்டமிட்ட முறையில் சிங்கள மயமாக்கப்பட்டமை குறித்த கட்டுரை வெளியாகி இருந்தது. இன்று இங்கு இந்த இரு நகரங்களிலும் தமிழர்கள் வாழ்ந்தமைக்கான வரலாற்றுச்சான்றுகளைப் பார்ப்போம். பதவியாவிலும் கந்தளாயிலும் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் இந்த இரு நகரங்களும் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்கள் என்பதை உறுதி செய்கின்றன. முதலில் பதவியாவில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளைப் பற்றிப் பார்ப்போம். பதவியாவில் மொத்தம் ஆறு கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 1953ஆம் ஆண்டு ஒன்றும் 1961ஆம் ஆண்டு ஐந்துமாக ஆறு கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இனி கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ளவற்றைப் பார்ப்போம்.

## கல்வெட்டுக்கள் தரும் சான்றுகள்

கல்வெட்டு இல. 2241-1953: இக்கல்வெட்டு 5' x 1.8' அளவுடையதாகக் காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டில் நான், ஆள, சோழன், சிங்கன், உடன், பாடினேன், அழுகிறவன், நடத்துவித்தவன், பவள மினி, ஐம்பொழில், விடங்கள், மனைநிலத்தில், காணி, செட்டி போன்ற சொற்கள் காணப்படுகின்றன. நாற்பத்தைந்து வரிகளைக் கொண்ட இந்தக் கல்வெட்டின் நாற்பத்தோராவது வரியில் வீரக்கொடி என்ற பெயர் காணப்படுகிறது.

பதவியாவில் இருந்த சிவன் கோயிலுக்கு வணிகர் கழகம் வழங்கிய நன்கொடை பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது.

இதைவிட மேலும் ஐந்து கல்வெட்டுகள் 1961ஆம் ஆண்டு பதவியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு இல. 2435-1961: இக்கல்வெட்டு கோயிலின் தெற்குப்புற அத்திவாரத்தில் கண்டெடுக்கப்பட்டது. 3' x 5'' உடைய ஒரு வரி இக்கல்வெட்டில் காணப்படுகிறது. இக்கல்வெட்டைப் பொறித்தவர் நாராயணன் திருச்சிற்றம்பலமுடையான்.

கல்வெட்டு 2436-1961: இக்கல்வெட்டு மேற்குப் புறச் சுவரில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது இரு வரிகளில் அமைந்துள்ளது. முதல் வரி 1' x 10'' அளவாகவும் இரண்டாவது வரி 4' x 4'' அளவாகவும் காணப்படுகிறது. இக்கல்வெட்டு அழகன் வட்ட மரஸ்வயன் என்பவனால் நாட்டப்பெற்றது.


கல்வெட்டு 2437-1961: இக்கல்வெட்டும் மேற்குப்புறச் சுவரிலேயே கண்டெடுக்கப்பட்டது. 3'2'' x 1.5'' அளவுள்ளதாக இக்கல்வெட்டு காணப்படுகிறது.

கல்வெட்டு 2438 -1961: இக்கல்வெட்டும் மேற்குப்புறச் சுவரிலேயே கண்டெடுக்கப்பட்டது. 3' ஒரு வரியில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. பதவியாவில் வாழ்ந்த தனி அப்பன் என்ற வணிகனால் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டுகள் யாவும் தமிழிலேயே எழுதப்பட்டுள்ளன. ஸ்வஸ்திஸ்ரீ என்ற சொல்லைத் தவிர ஸ்வஸ்திஸ்ரீ என்ற சொல் கிரந்தத்தில் (சமஸ்கிருதத்தில்) எழுதப்பட்டுள்ளது. இட்டது என்ற சொல் பல இடங்களில் வருகிறது. செட்டி, வணிகன் போன்ற சொற்களும் காணப்படுகின்றன. பதவியா ஒரு தலைநகரமாக இருந்ததற்கான சான்றுகள் இல்லை. அத்துடன் சிங்கள அரசர்கள் சிவன் கோயில் கட்டியதற்கான சாத்தியங்களும் குறைவு. தென்னிந்தியாவிலிருந்து வணிக நோக்கில் வந்த செட்டிகள் இக்கோயிலைக் கட்டியிருக்கலாம்.

இக்கல்வெட்டுகளில் காணப்படும் வாசகங்கள் பின்வருமாறு:-

''உத்தமர் தன் கோயில் வலகளி (Valakali) எனவும் நித்த நியமம் நெறிவளர் சித்தமுடன் சிறிலமாய் சென்ற பதியில் விளையாரம் பேரினமையாதுக்கள் பொற்றவயிரன் கொண்டுறைப்பார் திருச்சுத்தமாக முயன்றார் முயன்றார் திரு''


பதவியா நகரில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் இதுவும் ஒன்று

இங்கு Valakali என்பது கோயிலின் பெயராக இருக்கலாம். இந்தக் கல்வெட்டுகள் பன்னிரண்டாம் அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாக இருக்கலாம்.

அடுத்து கந்தளாயில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டைப் பார்ப்போம். 1954ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்ட இக்கல்வெட்டு தற்போது அனுராதபுரத்திலுள்ள தொல்பொருள் காட்சிச்சாலையில் (Museum) உள்ளது.

கல்வெட்டு இல 2291- 1954: இக்கல்வெட்டு தமிழிலும் கிரந்தத்திலும் எழுதப்பட்டுள்ளது. கஜபாகு மன்னனைப் பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. முதலாம் கஜபாகு, இரண்டாம் கஜபாகு என இரண்டு அரசர்கள் இருந்துள்ளனர். இக்கல்வெட்டு கூறும் கஜபாகு இரண்டாம் கஜபாகுவாக இருக்கலாம். இக்கல்வெட்டில் பத்து வரிகள் காணப்படுகின்றன.

இலங்கேஸ்வரன் என்ற சொல் தெளிவில்லாமல் காணப்படுகிறது. வரன் என்பது தெளிவாகக் காணப்படுகிறது. ''பிடி நடந்த பூமி'' என்ற வாசகமும் காணப்படுகிறது. இரண்டாம் கஜபாகு கந்தளாயில் சிறிது காலம் வாழ்ந்தவன். கந்தளாய்க் குளத்தைச் சுற்றியுள்ள நிலம் விவசாய நிலம். இந்த நிலத்தை பிரம்மதேயமாக மாற்றுவதே கஜபாகுவின் நோக்கம். பிராமணர்கள் மட்டுமே இந்தப் பகுதியில் அப்போது வாழ்ந்தனர். பிடி நடந்த பூமி என்பது பெண் யானை நடந்த இடம். இந்த பிராமணர்களின் கிராமத்திற்கு எல்லையாக வகுக்கப்பட்டது.

### கந்தளாய் கல் ஆசன விகாரைக்கருகில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு

இது 1947ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டது. 5'2'' x 3' அளவுள்ளது. இல 2028 இக்கல்வெட்டு பதினொராம் அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டில் நாட்டப்பட்டிருக்கலாம். 58 வரிகளில் அமைந்துள்ள இந்தக் கல்வெட்டின் பெரும் பகுதி அழிந்துள்ளது. இக்கல்வெட்டு நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அரசர்களால் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இக்கல்வெட்டில் தெளிவாக உள்ள சில சொற்கள் பின்வருமாறு:

நெய், விளக்கு, பாக்கு, சுண்ணாம்பு, புன்செய், இறை, பசு, செயல், இப்படி, அறம், பாகம், புரம், வீரர், உயர், கலியுக வடக்கு, தரை, பண்டம், பிரம்பு, சுருள், கலம்.

இக்கல்வெட்டின் இரண்டாவது வரி யானைகள், குதிரைகள், தேர் என்பன பற்றிக் குறிப்பிடுகிறது. இவை பெரும்பாலும் அரசனுடன் தொடர்புடைய சொற்கள். ஆதாரம்: **Ceylon Tamil Inscriptions part II A.Veluppillai.**

தமிழர்களின் பூர்வீக நிலங்களான கந்தளாயும் பதவியாவும் இன்று சிங்களப் பிரதேசங்களாக மாறி விட்டன. கந்தளாயில் கஞ்சிக்குப் போட்ட பயறு என்ற விகிதத்தில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களையும் அழித்தொழிக்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அண்மையில் கந்தளாயில் ஐ.தே.க. சார்பில் பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஒருவர் சுட்டுக்கொள்ளப்பட்டமை இதற்கு ஒரு உதாரணம். பதவியா நூறு வீதம் சிங்களமாகி விட்டது. ★

ந.பரமேஸ்வரன்

# பரவி வரும் டெங்குவை தடுக்கும் வழிமுறைகள்

சுகநலம்

**யாழ்.** மாவட்டத்தில் அண்மைக் காலமாக டெங்கு நோய் பரவி வருகின்றது. பல நோயாளர்கள் இனங் காணப்பட்டு சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

வேகமாகப் பரவிவரும் இந்த டெங்கு வைரஸ் காய்ச்சலில் இருந்து நாம் ஒவ்வொருவருமே பாதுகாக்கப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

### டெங்குக் காய்ச்சல்

வைரசினால் ஏற்படும் ஒரு நோயாகும். ஈடிஸ் இஜிப்ரி (Aedes aegypti), ஈடிஸ் எல்போ பிக்டஸ் (Aedes albopictus) எனும் இருவகை நுளம்புகள் டெங்கு நோயைப் பரப்புகின்றன. இந்த நுளம்புகள் பகல்வேளைகளிலேயே மனிதரைக் கடிக்கும் பழக்கம் உள்ளவை. [பெரும்பாலும் காலை 6 மணி தொடக்கம் 9 மணிவரை, மாலை 3 மணி தொடக்கம் 6 மணிவரை] இந்த நேரங்களில் சிறுவர்களுக்கு நீண்ட அங்கிகள் அணிவது சிறந்ததாகும்.

டெங்கு நோயின் சாதரண அறிகுறிகள்:

கடும் காய்ச்சல், தலைவலி, வாந்தி, மூட்டுவலி, வயிற்று நோவு.

மூன்று நான்கு நாள்களில் இந்நோயினுடைய குணங்குறிகள் குறைந்து நோய் குணமாகும். எனினும் சிலருக்கு டெங்கு குருதிப் பெருக்கு நோய் நிலையாக மாறலாம்.

டெங்கு குருதிப்பெருக்கு காய்ச்சலின் அடையாளங்கள்:

★ டெங்குக் காய்ச்சலுக்கு உள்ளது போன்றன.

★ தோலின் அடியில் சிறிய சிவப்பு அடையாளம் தோன்றுதல்.

★ கண்கள் சிவப்பு நிறமாதல்.

★ மூக்கினால் இரத்தம் வடிதல்.


★ மலம், சலத்துடன் இரத்தம் கலந்து வெளியேறுதல்.

★ முரசினால் இரத்தம் வெளியாதல்

★ வாந்தி அல்லது மலம் கறுப்பு அல்லது கபில நிறமாதல்.

★ வயிற்று நோ காணப்படுதல்.

இவ்வாறான நோய் அடையாளங்கள் ஏற்பட்டால் உடனே வைத்திய



சாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டும்.

டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவரின் காய்ச்சல் திடீரெனக் குறைந்து விடக்கூடும். என்றாலும் நோயாளி பலவீனமாகக் காணப்பட்டால் அது பாரதூரமான ஓர் அறிகுறியாகும்.

விசேடமாகக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ள ஒரு பிள்ளையின் காய்ச்சல் திடீரெனக் குறையுமெனின் அவதானமாக இருக்கவேண்டும்.

ஒரு நோயாளிக்கு உடம்பு குளிர்ந்து போதல், உடல் வெளிறல், கலக்கமான தூக்கமான நிலை, மூச்செடுத்தல் நாடியோட்டம் வேகமாதல் போன்ற பாரதூரமான அறிகுறிகள் ஏற்படல் போன்றவை நோய் அதிகரிப்பதைக் காட்டுகின்றன.

**டெங்குக் காய்ச்சலை இல்லாதொழிக்க:**

டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் பெருக்கமடைவதைத் தடுக்கவேண்டும். தண்ணீர் தேங்கி நிற்கும் பாத்திரங்களில் நுளம்புகள் உற்பத்தியாகும். இவற்றைத் தடுப்பதற்கு நீங்கள் பின்வரும் நடவடிக்கைகளை எடுங்கள்.

★ சிரட்டைகள், சட்டிபானைத் துண்டுகள், வெற்றுப்பாத்திரம், இளநீர்க் கோம்பைகள், பொலித்தீன் பைகள் போன்றவற்றை எரியுங்கள் அல்லது புதைத்து விடுங்கள்.

★ வீட்டின் பின்புறத் தில் வீட்டுச் சுற்றாலில் சேகரித்து வைக்கும் தேவையற்ற பாத்திரங்கள், ஏனைய பொருள்களில் நீர் தேங்காதவாறு கவிழ்த்து வைத்து விடுங்கள். அல்லது அழித்து விடுங்கள்.

★ ஓட்டில், பீலிகளில், வாய்க்கால்களில் நீர் தேங்காதவாறு நீர் வழிந்தோடத் தக்க வகையில் அடிக்கடி துப்புரவு செய்யுங்கள்.

★ ரயர்கள், மரப்பொந்துகள் என்பவற்றில் நீர் தேங்காதவாறு மண்போட்டு மூடி விடுங்கள் அல்லது ரயர்களில் நீர் தேங்காதவாறு துளையிடுங்கள்.

★ சுற்றாடலில் நுளம்புகள் தங்காதவாறு பற்றைகளை வெட்டி குப்பை கூழங்களை எரித்து சுற்றாடலைத் தூய்மையாகப் பேணுங்கள்.

★ பூச்சாடிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ளுங்கள். நீர் சேகரிக்கும் தொட்டிகள், பாத்திரங்களை நன்றாக கழுவி நீரை நான்கு நாள்களுக்கு ஒரு தடவையாவது மாற்றிக்கொள்ளுங்கள்.

**ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்:**

★ காய்ச்சல் ஏற்பட்டதும் முடியுமான அளவு படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்.

★ விசேடமாகப் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப வேண்டாம்.

★ அதிகமாக நீராகாரம் அருந்தச் செய்யுங்கள்.

★ அஸ்பிரின், அஸ்பிரின் கலந்த மருந்துவகைகளைக் கொடுக்க வேண்டாம்.

★ டெங்குக் காய்ச்சல் பற்றிச் சந்தேகம் ஏற்பட்டால் உடனே அண்மையில் உள்ள அரச வைத்திய சாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுங்கள்.

''உங்கள் சுகம் உங்கள் கைகளில் உங்கள் சுற்றாடலை நீங்களே சுத்தமாக வைத்திருங்கள்''.

# இன்றும் நினைவில் கொள்ள... அன்றைய ஞாபகம் ... இங்கே!



ஒக்ரோபர் 5 ஈழத்தமிழர்களின் வாழ்வில் மறக்கமுடியாத நாள். 1978ஆம் ஆண்டு ஒக்ரோபர் ஐந்தாம் திகதி நடைபெற்ற ஐ. நா.கூட்டத் தொடரில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி ஈழத்தமிழர் ஒருவர் உரையாற்றி உலகின் கவனத்தை ஈர்த்தார். அவர் தான் வைகுந்தவாசன்.

1978 ஆம் ஆண்டு ஒக்ரோபர் ஐந்தாம் திகதி நடைபெற்ற ஐ.நா. கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. உலகத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். ஒரு ஜனாதிபதி அல்லது பிரதமர் அல்லது ஒரு அரசாங்கத்தின் பிரதிநிதிதான் ஐ. நா. கூட்டத் தொடரில் கலந்துகொள்ள முடியும். இலங்கையின் சார்பில் அப்போதைய வெளிநாட்டமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் கலந்துகொண்டார்.

இலங்கைப் பிரதிநிதியின் சந்தர்ப்பம் வந்தது. கூட்டத்திற்கு தலைமை தாங்கிக் கொண்டு இருந்தவர் இப்போது இலங்கைப் பிரதிநிதி உரையாற்றுவார் என அறிவித்தார்.

திடீரென மேடையில் ஏறிய வைகுந்தவாசன் இரத்தினச் சுருக்கமாக தனது உரையை முடித்துக்கொண்டார். பாதுகாப்பு ஊழியர்கள் விழிப்படைந்து அவரை மேடையில் இருந்து இறக்குவதற்குள் அவர் தனது உரையை முடித்துவிட்டார்.

வைகுந்தவாசன் ஆற்றிய உரை இதுதான்.

தலைவர் அவர்களே! உலகத் தலைவர்களே!

ஒடுக்கப்படும் சிறுபான்மையினங்களான ஈழத்தமிழர்கள் போன்றவர்கள் இந்த உயர் மட்டக் குழுவுக்குத் தமது பிரதிநிதியை அனுப்ப முடியாது அப்படியானால் நாம் எங்கு போவது?

எனது பெயர் கிருஷ்ணா வைகுந்தவாசன். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள 2.5 மில்லியன் மக்கள் வாழும் தமிழீழத்திலிருந்து நான் வருகிறேன்.

இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக திட்டமிட்டுத் தமிழினத்தை அழித்து வருகின்றது.

ஒரு தனி நாட்டில் சுயநிர்ணய உரிமையுடன் எமது உரிமைகளை அனுபவித்தவர்கள் நாங்கள். தமிழ்ப் பிரச்சனை இந்தியப் பிராந்தியத்தில் சமாதானத்திற்கு பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

இலங்கைப் பிரச்சினை, பலஸ்த்தீனப் பிரச்சனையைப் போலவோ, சைப்பிரஸ் பிரச்சினையைப் போலவோ உருவெடுக்கலாம். உலகத் தலைவர்கள் உடனடியாகத் தலையிட்டு தீர்வுகாண உதவவேண்டும். நாங்கள் உங்களது உதவியைத்தான் எதிர்பார்க்கிறோம்! நன்றி! அனுமதியின்றி உரையாற்றியமைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்கின்றேன்.

-தாண்டவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விராட் விஸ்வப் பிரம்மனே நம

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சர்வசித்து வருடம் புரட்டாதி திங்கள் 14ம் நாள் (01.10.2007) திங்கட்கிழமை பிற்பகல் 12.03 மணி முதல் 1 மணி வரை வரும் சித்தயோகமும் ரோகிணி நட்சத்திரமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரி

செல்வி கீதாயினி அவர்களுக்கு

பூப்புனித நீராட்டு விழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்த ருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

557 (1035), கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
திரு.திருமதி சிவமூர்த்தி
குடும்பத்தினர்.

(66157)

குறிப்பு:
'தயவுசெய்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

## சங்கானைக் கோட்ட மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் சிறுவர் தினத்தையொட்டி சங்கானை கோட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் சிறுவர்களுக்கு பேனை, பென்சில்அப்பியாசக் கொப்பிகள் கொண்ட பொதியை இலவசமாக வழங்கியுள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை இப்பகுதி மாணவர்களுக்கு இவை வழங்கப்பட்டன.

(203-28)

## AN EXCLUSIVE OPPORTUNITY IN SINGAPORE

இதோ ஓர் மாபெரும் அரிய சந்தர்ப்பம்.!
சிங்கப்பூர்

முதன் முறையாக சிங்கப்பூரில் உயர் கல்வி தொடரும் மாணவர்களுக்கு...!

**BENEFITS TO THE STUDENTS : OFFER VALID UNTIL September 30th**

- சிங்கப்பூரில் வேலையுடன் கூடிய Diploma, Higher Diploma and Degree பாடநெறிகள்.
- சிங்கப்பூரில் 100% அரசாங்கத்திற்கே உரித்தான பல்கலைக்கழகம் (Degree awarded from Quality Class Approved Universities & Colleges).
- சகல கற்கைநெறிகளுக்குமான கட்டணங்களில் 50% கழிவு.
- பகுதி நேர வேலை வாய்ப்பு (Part-Time Job 100% Guarantee).
- உணவு தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
- இரண்டு வருடத்துக்குள் நிரந்தர வதிவிட உரிமை (PR) University பால் கற்கைநெறியின் முடிவில் வழங்கப்படும்.
- Diploma, Higher Diploma & Degree பாடநெறிகளை சிறப்பாக பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு UK, USA, Canada, Australia & New Zealand போன்ற நாடுகளுக்கு தொடர்ந்தும் உயர்கல்வியை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

STUDENT VISA - WORK PERMIT - PERMANENT RESIDENCY
GUARANTEE 100% VISA & PART TIME JOB
Minimum Qualification G.C.E.(O/L)

மேலும்..!

Guidance International மாணவர்களின் தேவைக்கேற்ப UK, USA, Canada, Australia, New Zealand, Mayasia & Singapore போன்ற நாடுகளுக்கு மிகக்குறைந்த செலவில் STUDENT VISA பெற்றுக்கொடுப்பதில் சிறப்பு அனுபவம் கொண்டவர்கள்.

பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் (Police Pass) ஒழுங்கு செய்து தரப்படும்.
கொழும்பில் பாதுகாப்புடன் கூடிய தங்குமிடவசதி ஏற்பாடு செய்து தரப்படும்.

**GUIDANCE INTERNATIONAL (PVT) LTD**
Professional Overseas Higher Education Consultant & Training Centre
P.O.Box : 7, Nugegoda 10250,Sri Lanka.
Customer service: 0094 (0) 11 576 2747/576 6999
facsimile: 0094 (0) 11 282 3498
E-mail: info@guidanceint.com Website:www.guidanceint.com
**0773973761**

## 4 ஆம் ஆண்டு நினைவில்



தாய்மடி 23 • 08 • 1936
இறையடி 30 • 09 • 2003

**அன்புத்தாய் பரமேஸ்வரி தம்பிப்பிள்ளை**

திதி:16.10.2007

ஏழாலையில் பிறந்து வளர்ந்து
அம்பாறையில் வாழ்ந்து பெயர் பெற்ற
புன்னகை பூத்திடும் அன்புத்தாயே!
கண்முன்னே வந்து நிறைந்திடும்
உம் வதனமே நமக்கு வழிகாட்டி...
உம்மை உருக்கி அன்றோ எம்மை ஆளாக்கினீர் - தாயே!
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும்
ஆறுமோ உங்களின் அருமைகள்...
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

"துவாரகை",
கே.கே.எஸ்.வீதி,
காரைதீவு-12.

கணவர்: நா.தம்பிப்பிள்ளை
மக்கள்: கருணா, கலைச்செல்வி, தவராஜா, ஜெயராஜா
மருமக்கள்: சிவநேசன், அமரசிங்கம், மைதிலி
தொடர்பு: 0602676436 பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள். (66346)

## வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

## தரம் 6 அனுமதி - 2008

மேற்படி அனுமதிக்கு 2007 ஆம் அண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களிடமிருந்து **மாத்திரம்** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை எமது பாடசாலைக் காரியாலயத்தில் பெற்று 20.10.2007 இற்கு முன்னர் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.

(சி.53839)

அதிபர்.

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
சண்முகநாதன்
சிவகுமார்(வெள்ளை)

தோற்றம் 07-02-1973
மறைவு 30-09-1996

'நிலையில்லா இவ்வுலகில் நிலைத்துவிட்ட உன் அன்பால்
யாவர்க்கும் இனியவராய் வாழ்ந்த சிவகுமாரா!
எம்மைவிட்டுப் பிரிந்து பதினொரு ஆண்டுகள் சென்றாலும்
உன்நினைவை மறக்க முடியாது.
எங்கும் தேடுகின்றோம் கண்களில் நீர் சொரிய!

சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(66322)

அம்மா, அத்தான், அக்கா,
மச்சான், தங்கை,
மருமக்கள்.

## JOIN THE No. 1 SERVICE BRAND

We at Janashakthi Insurance Company Limited were adjudged the No.1 Service Brand at the SLIM Brand Excellence Awards, 2006. In just 10 years of operations, we have out-performed industry records. With Janashakthi, it is about passion... to be the best and the achievers, it will take to get us there.

If you've got what it takes to be part of the NO.1service brand, we've got a place for you.

We require the following Sales staff to join our sales team at Jaffna, Nelliadi & Chunnakam Branches to market our products to the customer and to build customer relationships and promote loyalty campaigns:-

**Sales Advisors**
**Sales promotion Supervisors**
**Business promotion Assistants**
**Business Promotion Officers**
**Business Promotion Executives**

**Potential applicants should:-.**

- Be between 18 - 55 years of age.
- Passed the G. C. E. O/L Examination with a minimum of 06 passes, inc1uding Mathematics and Tamil.
- Prior sales experience in marketing would be an advantage.
- Those who have excelled in sports and/or other extra curricular activities will be given preference.

If you feel you fit the bill for any of the above vacancies, forward your *CVto* the address given below within 10 days from the date of this advertisement, together with the names of two non-related referees and your contact number.

Senior Zonal Manager- North & East,
**JANASHAKTHI INSURANCE CO., LTD.**
No, 165, Manipai Road,
Jaffna.

JANASHAKTHI INSURANCE

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் குமாரசேகரம் சிவமைந்தன்**
(உடையார் வளவு, உரும்பிராய்)

31.08.2007 அன்று பிரான்ஸில் இறைவனடி சேர்ந்த எனது அன்பு மகனின் துயரச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலமும் அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் 07.09.2007 இல் பிரான்ஸில் நடைபெற்ற அவரது இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வீட்டுக்கிருத்தியம் ஆத்மசாந்திப் பிரார்த்தனை பிரான்ஸில் 30.09.2007 இல் அவரது இல்லத்தில் நடைபெறும்.

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு அம்மா,
சகோதரர்கள்.
திருமதி பரிமளம் குமாரசேகரம்.

83, 2/4, கம்டன் லேன்,
கொழும்பு - 6.
2366970

(66334)

## மரண அறிவித்தல்

### திருமதி சிவராம் ஜெயமணி

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய திருமதி சிவராம் ஜெயமணி கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராமின் அன்பு மனைவியும் சிவவதனி, சிவஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2007) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வேதநாயகம்
-(மைத்துனர்).

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

(66345)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் இட்ட பெயரையே மாற்றிக் கொண்டு பாரதியாரைத் தமது குருவாக ஏற்ற கவிஞர்


## பாரதி - பாரதிதாசன் உறவு எவ்வாறு ஏற்பட்டது?

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர். தேசியக் கவிஞர்; தெய்விகக் கவிஞர். பழம்பெரும் புலவர் உலகத்துக்குள்ளேயே தேங்கிக் கிடந்த செந்தமிழின் சிறப்பையும், நயத்தையும், இனிமையையும், கற்பனை வளத்தையும், பொருளின் பொலிவையும், கன்னித் தன்மையையும், ஒரளவே தமிழ் அறிந்தோரும், ஏன் பாமர மக்களுங்கூடப் புரிந்து, சுவைத்து இன்புறச் செய்த புரட்சிக் கவிஞர்; புதுமைக் கவிஞர்.

அம் மகாகவியின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப்



மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுக்குமிடையில் எங்ஙனம் உறவு ஏற்பட்டது? எவ்வாறு கனகசுப்புரத்தினம் என்ற புலவர் பாரதிதாசன் என ஆனார் என்பதெல்லாம் பலருக்கும் தெரியாத விடயங்கள். இந்த உறவு ஏற்பட்ட விதம் குறித்து டாக்டர் முத்து கண்ணப்பன் இங்கு விளக்குகிறார். பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் மிக உருசிகரமாக இருப்பதைக் காணலாம். ''சிந்தனைப் பண்ணையில் பாரதிதாசன் ''என்ற வானதிபதிப்பக நூலிலிருந்து எடுத்தாளப்படுகின்றது இக்கட்டுரை.



பைந்தமிழின் மணம் பாரெங்கும் வீசச் செய்து, தமிழ்த்தேன்! தமிழ் அமுது என்று மக்களெலாம் அதனைப் பருகி, சுவைத்துச் சுவைத்து ஆனந்தக்கடலில் ஆழச்செய்து, கவியுலகில் சிரஞ்சீவித்தன்மை பெற்றுவிட்ட பெருஞ்சாதனையாளர் - புரட்சிப் புயல், அவருடைய மாணவராகிய கனக சுப்புரத்தினம்.

தம் அருமைக் குருவுக்குத் தாசனாகவே தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, தம் பெற்றோர் இட்ட பொன்னான நன்மணியான பெயரைக்கூட மாற்றிப் 'பாரதிதாசன்' என வைத்துக்கொண்டார் இப்புலவர். பெருந்தகை என்பதை எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் 'என்னே இவர்தம் குருபக்தி!' என்று வியந்து வியந்து, புகழ்ந்து புகழ்ந்து பாராட்ட அல்லவா தோன்றுகிறது!

குருபக்தியின் ஒட்டுமொத்த உருவமாக விளங்கிய பாரதிதாசனைப் பற்றிப் பாரதியார், எங்கங்கே, என்னென்ன கூறியுள்ளார் என்பதையறிய, பாரதியாரின் முப்பெரும் படைப்புக்களாகிய கவிதைத் தொகுப்பு, கட்டுரைத் தொகுப்பு, வசனங்கள் ஆகியவற்றில் துருவித்துருவித் தேடினேன். ஆனால், எங்கும் கனக சுப்புரத்தினம் என்ற பெயர் காணவில்லை.

அவர்தம் நூற்களில் நூற்றுக்கு மேற்பட்டோரைப் பல்வேறு நிலைகளில் குறிப்பிட்டுள்ளார்.

அருளாளர்கள், அறிஞர்கள், அரசியலார், தேசபக்தர்கள், கவிஞர்கள், நண்பர்கள், துணைவர்கள், தொண்டர்கள் இப்படிப் பலப் பலர்.

குள்ளச்சாமி, மாங்கொட்டைச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச்சாமி, (அருளம்பலம்) ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்தர், குருகோவிந்தர், சகோதரி நிவேதிதா, வெங்காயப் பழச்சாமி, சுவாமி அற்புதாநந்தர் முதலிய அருளாளர்கள்; மதுரைநாராயணசாமி ஐயர், கடிகைமுத்துப்புலவர், டாக்டர் உ.வே.சாமிநாதையர் போன்ற அறிஞர்கள், ஔவையார், ரவிந்திரநாதர் போன்ற கவிஞர்கள், காந்தியடிகள், வ.உ.சி. தாதாபாய் நவுரோஜி, பூபேந்திரர், திலகர், லஜபதிராய் போன்ற தேசபக்தர்கள், டாக்டர் அன்னிபெஸன்ட், இராஜாஜி, சேலம் நரசிம்மையார் முதலிய அரசியல் வாதிகள்; குவளைக்கண்ணன், வேணுமுதலி, விசுவநாதசர்மா முதலிய நண்பர்கள் - இப்படிப் பலரைத் தம் நூற்களில் பாரதியார் குறிப்பிட்டிருக்கிறார், இவற்றுள் சில கற்பனையாகவும் இருக்கலாம்.

ஆனால் ஒரிடத்திலேனும், கனக சுப்புரத்தினம் என்றோ, பாரதிதாசன் என்றோ அந்நூல்களில் எங்கும் எக்குறிப்பும் காணாது ஏமாற்றமடைந்தேன்; ஏக்கமுற்றேன்.

ஆனால் ஒரே ஒரிடத்தில் ஒரு குறிப்பு என் பார்வையில் பட்டது. பாரதிதாசன் என்னும் பெயர் குறிக்கப்படவில்லையெனினும் அக்குறிப்பின் கண்ணுள்ள செய்திகளை எண்ணிப் பார்த்தபோதுதான் 'இது பாரதிதாசனைப் பற்றியதுதான் என்று முடிவுசெய்து, சற்றே ஆறுதலுற்றேன்.

**பாரதி- பாரதிதாசன் சந்திப்பு**

பாரதியார் 'வசனங்கள்' என்னும் தம் நூல் தொகுப்பில் 'தராசு' என்னும் பகுதியில் கூறும் அச்செய்திகளை இங்கு அப்படியே தருகிறேன். உண்மையை வாசகர்களே உணர்ந்து கொள்ளலாம்: ''இன்று நம்து கடைக்கு ஒரு தமிழ்க் கவிராயர் வந்தார். கைக்கோளஜாதி. ஒட்டக்கூத்தப்புலவர் கூட அந்தக் குலந்தான் என்று நினைக்கின்றேன். இவருக்கு இங்கிலீஷ் தெரியாது. தம்முடைய பெயரை வெளிப்படுத்தவில்லை. தராசு முகமலர்ச்சியோடு சிரித்தது. இப்படியொரு கவிராயர் வந்தால் எனக்கு சந்தோஷம். எப்போதும் வீண்வம்பு பேசுவோரே வந்தால் என்ன செய்வேன்?, என்றது.

''கவிராயரே என்ன விடயம் கேட்க வந்தீர்?'' என்று தராசு கேட்டது.

கவிராயர் (பாரதிதாசன்) ''எனக்குக் கவிராயர் என்பது பரம்பரையாக வந்த பட்டம். என்னுடைய தகுதியால் ஏற்படவில்லை. அத்தகுதி பெற முயற்சி செய்து வருகின்றேன். அந்த விஷயமாகச் சில வார்த்தைகள் கேட்க வந்தேன்.

தராசு: இதுவரை பாடின பாட்டுண்டானால் சொல்லும்.

கவிஞர்: இதுவரை 40 அல்லது 50 அடிகளுக்குமேல் பாடியது கிடையாது. இப்போதுதான் ஆரம்பம். அது அத்தனை ரஸமில்லை.

தராசு: மாதிரி சொல்லும்.

(புலவர் பாடத் தொடங்குதல்; தொண்டை நல்ல தொண்டை)

''காளை யொருவன் கவிச் சுவையைக் - கரை
காண நினைத்த முழுநினைப்பில் - அன்னை
தோளசைத் தங்கு நடம்புரிவாள் - அவன்
தொல்லறி வாளர் திறம் பெறுவான்
ஆ! எங்கெங்கு காணினும் சத்தியடா - தம்பி
ஏழுகடல் அவள் வண்ணமடா - அங்குத்
தங்கும் வெளியினில் கோடியண்டம் - அந்தத்
தாயின்கைப் பந்தென ஒடுமடா! - ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும் வந்து
கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ? - எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம் - அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!''

தராசு: புலவரே, தமிழ் யாரிடம் படித்தீர்?

கவிராயர்: இன்னும் படிக்கவில்லை; இப்போது தான் ஆரம்பம் செய்கிறேன்.

தராசு: சரிதான், ஆரம்பம் குற்றமில்லை. விடா முயற்சியும், தெய்வபக்தியும் அறிவிலே விடுதலையும் ஏறினால், கவிதையிலே வலிமையேறும்.

இங்ஙனம் வார்த்தை சொல்லிக் கொண்டிருக்கையில் சிட்டிக்கடை (துணிக்கடை) ஸேட் வந்தார்.

''சாமியாரே, தீபாவளி சமீபத்திலிருக்கிறது. ஏதேனும் சிட்டித்துணி செலவுண்டா?'' என்று ஸேட் கேட்டார்.

''இல்லை'' என்று சொன்னேன்.

அப்போது ஸேட் சொல்லுகிறார். ''நான் அதற்கு மாத்திரம் வரவில்லை. வேறு சங்கதி கேட்கவும் வந்தேன். தராசு நடக்கப்போவதை அறிந்து சொல்லுமோ?'' ''சொல்லாது'' என்று தராசே சொல்லிற்று.

''சொல்லச் சம்மதமிருந்தால் சொல்லும். இல்லாவிட்டால் சொல்லாது. எதற்கும் நீர் கேட்கவந்த விஷயமென்ன? அதை வெளியிடும்'' என்று நான் சொல்லப்போனேன்.

தராசு என்னிடம் ''காளிதாஸா அ-,'என்றது'. ''இந்த அ' காரத்திற்கு 'அடக்கு' என்றர்த்தம். அதாவது என்னுடைய கருத்துக்கு விரோதமாக வார்த்தை சொல்லாதே'' என்றர்த்தம்.

தராசு: ''அ -'' என்ற உடனே நான் வருத்தத்துடனே தலை குனிந்து கொண்டேன்.

ஸேட்: 'தீபாவளி சமயத்தில் எங்கள் கடைக்குப் பத்து நூறாகவும் நூறு ஆயிரமாகவும், லாபம் வரும்படி தராசு தன் வாயினால் வாழ்த்த வேண்டும். அப்படி வாழ்த்துவதற்கு ஏதேனும் கூலி வேண்டுமானாலும் கொடுத்துவிடுகிறேன்'' என்றார்.

தராசு: ''கூலி வேண்டாம், ஸேட்ஜி, இனாமாகவே ஆசிர்வாதம் பண்ணிவிடுகிறேன். உமக்கு மேன்மேலும் லாபம் பெருகும், நாட்டுத் துணி வாங்கி விற்றால்'' என்றது. ஸேட் விடைபெற்றுக் கொண்டு போனார்.

கவிராயர் தராசை நோக்கி ''நம்முடைய ஸம்பாஷணைக்கு நடுவிலே கொஞ்சம் இடையூறுண்டாயிற்று'' என்றார்.

தராசு சொல்லுகிறது: உமக்கும் அதுதான்காணும் வார்த்தை, நெசவிலே நாட்டு நெசவுமேல், விலைக்குச் செய்வதைக் காட்டிலும் புகழுக்குச் செய்வதே மேல். பணம் நல்லது, ஆனால் பணத்தைக் காட்டிலும் தொழிலருமை மேல். காசிப் பட்டுப் போலே செய்ய வேண்டும். 'மல்' நெசவு கூடாது. மஸ்லீன் நீடித்து நிற்காது. பாட்டிலே வலிமை, தெளிவு, மேன்மை, ஆழம், நேர்மை இத்தனையும் இருக்க வேண்டும். இதற்கு மேலே நல்ல வர்ணம் சேர்த்தால் குற்றமில்லை. சேராமலிருந்தால் விஷேசம்.

அப்போது புலவர் தராசை நோக்கி ''நீரே எனது குரு'' என்று சொல்லி நமஸ்காரம் பண்ணினார்.

தராசு: எழுக! நீ புலவன்! என்றது.

**பாரதிதானுக்கு பாரதி கூறிய அறிவுரை**

தராசு (பாரதியார்) கவிராயருக்கு (பாரதிதாசனுக்கு) கூறிய அறிவுரை மிகுந்த சிந்தனைக்குரியது. ஆழ்ந்த பொருள் பொதிந்தது. அதனைச் சிறிது ஆராய்வோம்.

''நாட்டுத் துணி வாங்கி விற்றால் உமக்கு மேன்மேலும் லாபம் பெருகும்'' என்று ஸேட்டுக்குச் சொன்னது உனக்கும் பொருந்தும் என்கிறார். துணி வணிகராகிய ஸேட்டுக்கு நாட்டுத் துணியை விற்றால் லாபம் பெருகும் என்பது உள்ளுறை. கவிராயராகிய பாரதிதாசனுக்கு 'நாட்டு நெசவுமேல், என்று கூறுவதால் நாட்டுப் பற்றுப் பற்றிய பாடல்கள் - தேசியப் பாடல்கள் பாடவேண்டும், அதனால் பேரும் புகழும் பெருகும் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார்.

அவ்வாறே, ''விலையைவிடப் புகழுக்குப் பாட வேண்டும்; பணத்தைவிடத் தொழில் சிறந்தது'' என்று கூறும் அறிவுரை ''பணம் பெரிதன்று, 'பாடுவதே தொழில்'' அதுதான் உயர்ந்தது; சிறந்தது; பெயரையும் புகழையும் நிலைபெறச் செய்வது'' என்னும் பொருள் பொதிந்துள்ளதைக் காணலாம். ''எமக்குத் தொழில் கவிதை'' என்று பாரதியார் பாடுவதும் ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

பின்னர் ''காசிப்பட்டுப் போலப் பாடவேண்டும்'' என்கிறார். காசிப்பட்டு, அழகுக்கும், தரத்துக்கும், நிறத்துக்கும் நீடித்த உழைப்புக்கும் பேர் போனது. அவ்வாறே பாடும் பாடல்களும், நயமும், நளினமும், ஓசையும், கம்பீரமும், நிலைத்து நீடித்து நிற்கும் தன்மையும் உடையனவாய் விளங்கவேண்டும் என்றும் உட்பொருளைக் கொண்டுள்ளது இவ்வறிவுரை.

# வெறுவெளி அரங்கக் குழுவின் குறுந்திரைப்படங்கள் இரண்டு

## ஒரு பார்வை

அண்மைக்காலங்களில் ஈழத் தமிழர் கள் குறுந்திரைப்படம் எடுப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பிரித்தானிய ஸ்க் றிப்ற் நெற் உள்ளூர் எழுத்தாளர், கலைஞர்களுக்குப் பயிற்சி அளித்ததை அடுத்து சில குறும் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களும் சில படங்களை வெளியிட்டு உள்ளனர்.

தம் பங்குக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையின் வெறுவெளி அரங்கக்குழு தயாரித்த இரு குறும் படங்களை பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது.

**வெட்டை**

இப்படத்துக்கு களம் வெட்டை. பொட்டல் வெளிகள் இருந்தாலும் மான், பன்றி பேன்ற மிருகங்களை வேட்டையாடக் கூடிய காடு. அங்கே ஒரு குடியிருப்பு. மண் குடிசைகளில் வாழும் ஏழை எளிய மக்கள். கந்தசாமி ஒரு தனிப்பிறவி. யாரோடும் ஒட்டாமல் உறவாடாமல் ஒதுங்கியே வாழ்பவன், நல்ல வேட்டைக்காரன். இப்பொழுது வேட்டையை விட்டுவிட்டான். விறகு வெட்டி விற்று கிடைக்கும் பணத்தைத் தன் குடிசையில் குழியில் இட்டு மூடி வைத்திருக்கிறான். அவன் கனவு ஒரு வண்டில் வாங்கி ஓட்டுவது. அவனை வேறு தொழி லில் ஈடுபடுத்த அரியம் எடுத்த முயற்சி தோல்வியுறவே அவன் கந்தசாமி புதைத்து வைத்த புதையலைக் களவெடுக்கிறான்.

களவு கொடுத்த பொழுது காட்டு மிருகம் போல வெறி கொண்டு அலைந்தாலும் கந்தசாமி விரைவில் அவன் இயல்பு நிலைக்கு மீள்கிறான். ஒரு நாம்பனை வாங்கி நடை பழக்குகிறான். ஒற்றைச் சில்லை கொண்டு செல்லும் ஒருவனை நம்பிக்கையோடு நோக்குகிறான். மாடு, ஒரு சில்,ஒரு சில் இப்படியே சிறுகச் சேர்த்தால் தான் கனவு காணும் வண்டில் கைப்படலாம் என்று நினைக்கிறான் போலும்.

''வெட்டை'' மூலம் ரதிதரன் நமக்கு காட்டும் உலகம் நாகரிகத்தால் மாசுபடாத- களங்கமில்லாத-உலகம். அந்த உலகில் தானும் தன்பாடுமாய் இருக்கும் ஒருவனை நாகரிகம் என்ன பாடுபடுத்துகிறது. அந்த பாதிப்பில் இருந்து மீண்டு அவன் நம்பிக்கையோடு நிமிர்வதுதான் செய்தி.

அற்புதமான படப்பிடிப்பும் அற்புதனின் உள்ளத்தைச் சுண்டி இழுக்கும் இசையும் ''வெட்டை'' யின் சிறப்பு முத்திரைகள்.

**கால்**

திருமணம் மற்றும் விழாக்களின்போது காலணிகள் களவாடப்படுவது சகஜம். இக் காலணிகளை காப்பாற்ற முன் எச்சரிக்கையோடு நடந்து கொள்பவர் உளர். இருந்த போதும் காலணிக் களவுகள் நடந்து கொண்டேயிருக்கின்றன.

கால்களையும் காலணிகளையும் வைத்தே ஒரு குறுந் திரைப்படம் எடுத்திருக்கிறார் ரதிரதன். மாப்பிள்ளை-மணப்பெண்ணின் கால்கள், விருந்தினர்களின் கால்கள், முதியோரின் கால்கள், சிறுவர்களின் கால்கள், படியேறும் கால்கள்,ஓடும் கால்கள், நடக்கும் கால்கள், ''கால்கள் எத்தனை கால்களடி'' என்று பாடலாம் போல்! காலணிகளும் விதம் விதம்- மனிதருடைய அந்தஸ்துக்கு ஏற்றபடி!

திருடர் கண்ணுக்கு படாதபடி ஒதுக்குப்புறம் வைத்த காலணிகளை எற்றி விளையாடும் சிறுவர், தம் காலணிகளை மிதித்து சினத்தை தீர்த்துக் கொள்ளும் மூவர். களவெடுத்த காலணிகளை சண்டிக் கட்டுக்குள் மறைத்து கொண்டு ஓடும் திருடன். இப்படி பல நடத்தைக் கோலங்கள்.

ஒரு முகத்தைக் கூட காட்டாமல் கால்களை வைத்து கொண்டே கதை சொல்லும் வித்தை ரதிதரனுக்கு கைவந்தது. **"To see a world in a grain of sand"** என்பர் **Blake** கால்கள் மூலம் உலகத்தை காட்டுதல் எத்தகைய முயற்சி என்[illegible]


[illegible]

# சமூகத்தின் மத்தியில் நூலகம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சி

## வாசிப்பு மாதத்தில் அறிமுகமாகும் புதிய திட்டம்

நூலக விழிப்புணர்வு நிறுவகம் தனது நூலக விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஆங்காங்கே பல செயற் திட்டங்களை மேற்கொண்டவாறு இரண்டரை வயதை அடைந்து விட்டது. தனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் நூலகம் பற்றிய விழிப்புணர்வை சமூகத்தின் அனைத்து மட்டத்திலும் ஏற்படுத்தி ஒட்டுமொத்தமாக முழுச் சமூகத்திலும் நூலகம் பற்றிய உணர்வைத் தட்டியெழுப்புவதனை நோக்கமாகக் கொண்டு செயற்திட்டங்களை வகுத்துச் செயற்பட்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில்தான் இந்த ஆண்டு ஒக்ரோபர் ''வாசிப்பு மாதத்தில்'' இந்நிறுவகம் அறிமுகப்படுத்தும் புதிய திட்டம் பாடசாலைகளுக்கிடையிலான நூலக விழிப்புணர்வுச் செயற்திட்டமாகும்.

உலகின் முன்னணி நாடுகளுக்கு இணையான அளவு எழுத்தறிவு மற்றும் கல்வியறிவு வீதத்தைக் கொண்டது யாழ்ப்பாணத் தமிழ்ச் சமூகம். பொதுவாகக், கல்வியைத் தொழிலுக்குரிய மூலதனமாகப் பார்க் கும்



எமது பிரதேச மக்களின் இன்றைய வாழ்க்கையின் பொதுப் பண்பாக அடையாளப்படுத்தப்படுவது, கசடு அறக் கற்க இயலாத அசாதாரண சூழலும், கல்வியைத் தனியே பரீட்சைக்காக மட்டும் அவசர அவசரமாகக் கற்று அதிலிருந்து மீண்டெழுந்தாற் போதுமென்ற மனநிலையில் அதைத் தேடி ஓடும் மாணவ சமூகம் ஆகும்.

இச்சூழலைப் புறந்தள்ளிவிட்டு கற்றலோடுகூடிய அறிவுத் தேடலை நம் இளஞ் சமூகம் மேற்கொள்ள வழிகாட்ட வேண்டியதும். கூடவே வாசிப்புப் பழக்கத்தையும் தகவல் தேடலையும் பாடசாலையினருக்குப் பழக்கப்படுத்த வேண்டியதும் நூலகத் துறை சார்ந்த மூத்தவர்களது தலையாய கடமையாகும். இது இன்றைய காலத்தின் தேவை. அத்துடன் பல காரணங்களால் நொந்து நலிந்துபோயிருக்கும் எம் சமூகத்தின் இன்றியமையாத தேவையும் ஆகும்.

இத்தகைய தேவையை அடிநாதமாகக் கொண்டு பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன் நூலக விழிப்புணர்வு நிறுவகமானது 2007 ஒக்ரோபர் வாசிப்பு மாதத்தில் இருந்து வருடந்தோறும் யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான நூலக விழிப்புணர்வு சார்ந்த கட்டுரை, பொது அறிவு மற்றும் பேச்சுப் போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளதனை இந்நிறுவகத்தினால் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கும் விண்ணப் படிவங்களிலிருந்து அவதானிக்கக் கூடியதாக உள்ளது. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களின்படி கட்டுரைப் போட்டியும் பேச்சுப் பேட்டியும் ஆண்டு 10-13 மாணவர்களை இலக்கு வைத்தும் பொது அறிவுப் போட்டி ஆண்டு 6-9 மாணவர்களை இலக்கு வைத்தும் நடத்தப்படுகின்றன.

பாடசாலைக்கு விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆண்டு 10-11 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் இயற்கை உணவும் ஆரோக்கியமும், சூழல் மாசடைதல், வளமாக வாழ, யாழ்ப்பாணப் பொதுசனநூலகம் ஒரு தமிழர் பண்பாட்டு மையம். 'கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு' ஆகிய ஐந்து தலைப்புகளும் ஆண்டு 12-13 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் புதிய பாடத்திட்டமும் நூலகப் பயன்பாட்டின் அவசியமும், மனிதமும் இன்றைய மனிதமம், நாவலரும் நூலகப் பணியும், வீட்டுக் கழிவுகளும் தீங்குகளும், மீள்பயன்பாடும், உலகமயமாதல்: தாக்கங்கள் ஆகிய தலைப்புகளும் உள்ளடக்கப்படுகின்றன.

ஆண்டு 10-11 மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் கசடு அறக் கற்க....., குழந்தைப் பருவமும் வாசிப்புச் சூழலும், வாசிப்பால் உயர்ந்த மகத்தான மனிதர் அப்துல் கலாம், புனிதமுற்று மக்கள் புதுவாழ்வ வேண்டின்..., நூலகம்- ஊருக்கு அறிவுநீர்க்கேணி ஆகிய ஐந்து தலைப்புகளும் ஆண்டு 12-13 மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் தேடலின்றிப் பெறும் அறிவு தேடுவாரற்றது..., கணனி உலகின் கணக்கற்ற விந்தைகள், வளமான வாசிப்பு மானிடத்தின் மேம்பாடு, மனிதனை முழுமனிதனாக்கிய பிரான்ஸிஸ் பேகன், வாசிப்பை நேசி.... யாசி....யோசி.... ஆகிய ஐந்து தலைப்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாடப் புத்தகங்களுடன் மட்டும் ஊடாடித் தகவலைப் பெறாது அதிலிருந்தும் விடுபட்டு வெளிக்கிளம்பி ஒரு பரந்துபட்ட தயார்படுத்தலுக்கு இடங்கொடுக்கும் நோக்கில் தான் கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டித் தலைப்புகள் முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. மாணவரைத் தயார்படுத்த குடும்பத்தினரும் பள்ளிக்கூடத்தினரும் ஒத்துழைக்க இப் போட்டி முறைமை இடம்விட்டுள்ளது.

சிறிய சிறிய அளவிலே ஏற்படுத்தப்படும் நூலகம் பற்றிய உணர்வுகள் காலகதியில் நிச்சயம் பாரிய மாற்றத்தை நம் சமூகத்திற்கு வழங்கும். சிந்தனையைத் தூண்டவல்ல இந்தச் செயற்திட்டம் 2007 ஒக்ரோபர் வாசிப்பு மாதத்தில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆக்கபூர்வமான இச் செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ள இந் நிறுவகத்தின் குறிக்கோளை தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் வியாபிக்கச் செய்ய ஒத்துழைப்பு வழங்குவது நம் சமூகத்தை நாம் அறிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல தயார் என்பதை அடையாளப்படுத்திக் காட்டும்.


பாடசாலை மாணவர்களுக்கான இவ் விழிப்புணர்வுச் செயற்திட்டம் பயன்பாடுடையதாக அமைய மாணவர்களை அவர் தம் பெற்றோரும், அவர்களது பாடசாலை சமூகமும் வழிநடத்துங்கள். இவ்வாறு உகந்த சூழலை அனைவருமாக ஏற்படுத்தி கல்வியிற் குன்றா அறிவுநிறைந்த சமூகமாக எம் சமூகம் தொடர்ந்தும் துலக்கம் பெற இன்றிலிருந்தே செயற்பட ஆரம்பியுங்கள்.

'வளமான வாசிப்பு மானுடத்தின் மேம்பாடு' **மைதிலி விசாகருபன்**

**உதவி நூலகர் - யாழ். பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CIMA



# இணக்கமான கொடுப்பனவு திட்டங்கள் அது இல்குவானதாக இருக்கமாட்டாது.

நீங்கள் வர்த்தகத்தில் ஒரு பதவியைத் தீர்மானித்தால் சீமாவை (CIMA) பின்பற்றுங்கள். அது ஒரு விசேடமான தெரிவு. தற்போது அது இலகுவானதும் இணங்கக் கூடியதுமான தெரிவும் கூட.

புதிய, தற்போதுள்ள 'கார்ட்' உறுப்பினர்களுக்கென சுலபமான, இணக்கமான நம்பகத் தன்மையான 'கார்ட்' கொடுப்பனவுத் திட்டங்களை வழங்க, சீமா (CIMA) ஸ்ரீலங்கா முதன் முறையாக அமெரிக்கன் எக்ஸ்பிரஸ், சம்பத் வங்கி, செலான் வங்கி ஆகியவற்றை ஒருங்கே இணைத்துள்ளது. இத்திட்டங்கள் மூலமாக பதிவு, சந்தா, பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தலாம்.

சீமா(CIMA) ஒரு பாரிய முதலீட்டு நிறுவனமாகும். வெளிப்புற வர்த்தக சாதனைகளுக்காக, தனது உறுப்பினர் களை முழுமையாக தயார் படுத்தும் ஒரேயொரு பொறுப்பான நிறுவனம் எமது நிறுவனமாகும். சீமாவின் கல்வித்தரம் உலகின் மிகப் பெரிய, சிறந்த வேலைகொள் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கணக்கியல் கல்வித்தரத்தை அந்நிறுவனங்கள் பெரிதும் மதிக்கின்றன.
சீமாவை(CIMA) தெரிவு செய்வதன் மூலம், விருதுக்கான மகத்துவத்துக்கான ஒரு பதவியை நோக்கி நீங்கள் முதல் அடியை எடுக்கிறீர்கள்.
தற்போது அதை அடையாளப்படுத்த சிரமமில்லை அப்படித்தானே?!

நம்பக அட்டை(கார்ட்) கொடுப்பனவுத் திட்டங்கள் தொடர்பான மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்வதற்கு:
சீமா: 250 3880 அல்லது அருகிலுள்ள வங்கிக் கிளைகளுடன் தொடர்பு கொள்ளவும்.

Genesys

Banking partners of the CIMA flexible payment plan

NationsTrust Bank | American Express | සම්පත් බැංකුව SampathBank WE PRESENT YOUR FUTURE | SEYLAN BANK PLC

CIMA Sri Lanka Division, 356 Elvitigala Mawatha, Colombo 5
T: 2503880 | F: 2503881 | E: colombo@cimaglobal.com | www.cimaglobal.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்த எழுத்தாளர் தாழையடி சபாரத்தினம் மறுமலர்ச்சி காலத்தைச் (1946-1948) சேர்ந்தவர். அதற்குப் பின்னரும் இவர் பல சிறுகதைகளை எழுதினார். இவரது சிறுகதைகள் ''புது வாழ்வு'' என்ற தொகுதியாக வெளிவந்தது. கல்கி சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்றவர். ஈழத்து வாசகர்களுக்கு மட்டுமன்றி தமிழகத்திலும் நன்கு அறிமுகமானவர். சிறுகதைகள் மட்டுமன்றி நாடகம், உருவகக் கதை ஆகிய துறைகளிலும் சிறப்பு முத்திரைகள் குத்தியவர். 'விவேகி' மற்றும் பல இலக்கிய சஞ்சிகைகளின் ஆசிரியராக விளங்கியவர். ''சுதந்திரன்'' வார இதழில் 1950ஆம் ஆண்டில் வெளிவந்த ''சடையம்மா'' என்ற சிறுகதை பலராலும் பாராட்டப்பட்டது.

# சடையம்மா

செல்வச் சந்நிதி முருகனுடைய கோயில் சரித்திரப் பிரதிபற்ற புண்ணிய ஷேத்திரங்களிலொன்று. உற்சவ காலத்தில் பத்து இருபது மைல்களிலிருந்தும் பக்தர்கள் வண்டிகளிலும் கால்நடையிலும் வந்து குவிவார்கள்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை.காளை எருதுகள் பூட்டிய இரட்டை மாட்டு வண்டியிலிருந்து இரு பெண்கள் பால்,தேங்காய், வெற்றிலை பாக்குடன் கோயிலுக்குள் செல்கிறார்கள். ஒரு பெண்ணுக்கு நாற்பத்தைந்து வயசிருக்கும். மற்றவர் இளம் பெண். இருபத்திரண்டு இருபத்திமூன்று வயசிருக்கலாம். இளம் பெண்ணின் கண்களில் நீர் துளிர்த்துப் போயிருந்தது. பக்தியோடு ஒவ்வொரு விக்கிரகத்தையும் மூன்று முறை வலம் வந்த அவள் நெற்றியில் முத்து முத்தாய் வியர்வை அரும்பியிருந்தது.

'அம்மா சடையம்மாவிடம் போகலாமா' என்றாள் அந்தப் பெண். 'பிரசாதம் வாங்கிக் கொண்டு போவோம்' என்றாள் தாயார். வண்டியில் பட்டுத் துண்டால் மூடப்பட்டிருந்த ஒரு தட்டை எடுத்துக்கொண்டு இருவரும் சடையம்மா இருந்த மடத்திற்குச் சென்றனர். தட்டைக் கீழே வைத்துவிட்டு வீழ்ந்து சடையம்மாவை நமஸ்கரித் தாள் அந்தப் பெண். சடையம்மாள் நமஸ்காரத்தை விரும்பாதவள் போல திடீரென்று எழுந்து இருவரையும் உடகாரும்படி அன்பாய் வேண்டினாள்.

சடையம்மாவுக்குச் சுமார் இருபத்தைந்து அல்லது இருபத்தாறு வயதிருக்கும். நல்ல சிவந்த மேனி. வருடக்கணக்காக எண்ணையைக் காணாத தலைமயிர் சடைப்பிடித்துப் போயிருந்தது. அந்தச் சடைக்குள்ளிருந்த அவளது அழகான முகத்தில் கண்களும் ஒளி வீசிக்கொண்டிருந்தன. இளமையிலே சந்நியாசத்தை ஏற்றுக்கொண்ட அந்த யௌவன சந்நியாசியின் வாழ்க்கை வரலாறு எல்லோருக்குமே புதிராயிருந்தது. அவள் கபட சந்நியாசிகளைப் போல் 'சம்போ மகாதேவா' ஒன்றும் கூறவில்லை. விபூதியை அள்ளிக் கையில் வைத்து மந்திரம் செபிக்கவில்லை. தன் சகோதரியையும் அன்னையையும் போல் இருவரையும் வாத்சல்யத்தோடு தழுவினாள். தான் ஒரு தெய்வப்பிறவியென்றோ யோகியொன்றோ அவள் பிரசாரம் செய்யவில்லை. ஆனால் குழந்தையில்லாத பெண்கள் அவளின் ஆசீர்வாதம் பெற - குழந்தை வரம் பெற வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். சடையம்மாவின் நிம்மதிக்கு இவை இடையூறாயிருந்த போதிலும் அவளோடு கூடப்பிறந்த சகிப்புத்தன்மை சீறிச் சினக்காமல் எல்லோருடனும் அன்பாய் நடக்க இடங்கொடுத்தது. வரங்கொடுக்கும் சக்தி தன்னிடம் இல்லை என்று அவள் எண்ணிக்கொண்டிருந்தாள். ஆனால் ஜனங்கள் சக்தி தேவியே மானிட உருவில் வந்திருக்கிறா ளென்று போற்றினர். அவள் தரிசனத்தால் வருடக் கணக்காய் குழந்தையில்லாதவர்கள் பிள் ளைப் பாக்கியம் பெற்றனராம்.

இன்று வந்திருந்த இளம்பெண் பூரண கர்ப்பவதி. இற்றைக்குச் சுமார் ஒரு வருடத்திற்கு முன் சடையம்மாவைத் தரிசித்து ஆசீர்வாதம் பெற்றதாலேயே தான் கர்ப்பவதியாகியிருப்பதாக அவள் எண்ணிக் கொண்டிருக்கிறாள். பிற ஊரில் உத்தியோகம் வகிக்கும் கணவனோடு குடித்தனம் நடத்தியவளைப் பிரசவத்திற்காகத் தாயார் போய் அழைத்து வந்திருக்கிறாள்.

'எப்படியம்மா சௌக்கியமாயிருக்கிறாயா?' என்றாள் சடையம்மா.

'உங்கள் அனுக்கிரகத்தாலும் ஆசீர்வாதத்தாலும் சுகமாயிருக்கிறேன் தாயே' என்றாள். அந்த இளம்பெண் பக்திப் பெருக்கோடு.

'எல்லாம் அந்தக் கடவுளின் செயல். மனிதரால் என்னம்மா செய்ய முடியும்'.

தட்டில் கொண்டு வந்தவற்றை எல்லாம் எடுத்து வைத்தாள் அந்தக் கர்ப்பிணி. சடையம்மா சிரித்தாள். 'என்னை ஏனம்மா இப்படி உபத்திரவம் செய்கிறாய். பணத்தையும் எடுத்துக் கொண்டு போ. இந்தப் பழங்களை மட்டும் நான் எடுத்துக்கொள்கிறேன். பணத்தைப் பூட்டி வைக்க என்னிடம் இரும்புப் பெட்டி இல்லையே?'

அந்த இளம் பெண்ணின் முகம் வாடிவிட்டது. பதில் பேசாமல் பணத்தையும் பட்டுத் துண்டையும் எடுத்துக் கொண்டாள். 'அபசாரத்தை மன்னிக்க வேண்டும்' என்றாள். அவள் தொண்டை கம்மிப் போயிருந்தது.

சடையம்மாவின் முகத்திலும் வருத்தக் குறிகள் தென்பட்டன. 'ஏனம்மா வருத்தப்படுகிறாய். உன் அபரிமிதமான அன்பை யாராவது அபசாரமாகக் கருதுவார்களா? உனக்குப் பிறக்கப் போகும் போக்கிரிப் பயலுக்கு என்னை நினைத் துக் கொண்டு இந்தப் பட்டுத் துண்டில் ஒரு சட்டை தைத்துப்போடு'.

அந்த இளம் பெண்ணின் கண்கள் ஆனந்தத்தால் மலர்ந்தன. சடையம்மாவின் வாயிலிருந்து ஆண் குழந்தை என்ற சொல் வெளிவந்ததே அந்த ஆனந்தத்திற்குக் காரணம். அவள் அதை தேவவாக்காக எண்ணினாள். பட்டுத் துண்டை எடுத்துப் பத்திரமாக வைத்துக் கொண்டாள். தனக்கு ஆண் குழந்தை பிறந்து விட்டது போன்ற ஒரு உணர்ச்சி அவளுக்கு.

ஒரு வருடம் கழிந்துவிட்டது. அன்று ஏனோ சடையம்மாவின் மனம் அலைமோதிக் கொண்டிருந்தது. அவளிருந்த மடத்துவாசலிலிருந்த பவள மல்லிகை மரம் பூத்துச் சொரிந்து கொண்டிருந்தது. மெல்லிய தென்றலில் மலர்களின் இதமான வாசனை மிதந்து வந்துகொண்டிருந்தது. கோயிலில் ஜன சந்தடி அற்ற நேரம். அமைதி கலந்த தனிமை சடையம்மாவின் உள்ளத்தே பழைய வாழ்க்கைச் சம்பவங்களைக் கிளறி விட்டுக் கொண்டிருந்தது.

இன்றோடு சடயம்மா கணவனைப் பிரிந்து ஐந்து வருடங்கள் பூர்த்தியாகின்றன. அவளுடைய கணவன் சாதாரணமானவனல்லன். அவனொரு பிரபல எழுத்தாளனும் ஒரு பத்திரிகையின் ஆசிரியனுமாவான். அவன் புகழ் பரவிக் கொண்டிருக்கும்போதே அவள் அவன் கைப் பிடித்தாள். அவள் பணக்காரியல்லள். அவனும் பணக்காரனல்லன். அவளிடம் நகையொன்றுமே கிடையாது. அவனும் சம்பாதித்துக் கொடுக்கவில்லை. அவளும் அதைப்பற்றி எண்ணவில்லை. அவனது புகழ் மாலைகளே அவள் ஆபரணங்கள். அறிவின் சிகரமான கணவனைப் பெற்ற அவளுக்கு வேறு எந்த ஆபரணமும் வேண்டிக் கிடக்கவில்லை.

ஒரு வருடம் கழிந்தது. இரண்டு வருடங்கள் கழிந்தன. வாழ்க்கை இன்பமாகவே ஓடிக் கொண்டிருந்தது. அவன் எழுதும் கட்டுரைகள், கதைகளின் பாணி மாறிக்கொண்டிருந்தது. அநேகமாக எல்லா எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகளிலும் அவர்கள் உள்ளம்தான் பிரதிபலிக்கிறது. விவாகமாகாத ஒரு எழுத்தாளனின் காதல் சம்பவங்களே உதயமாகின்றன. விவாகமான புதிதில் தாம்பத்திய வாழ்வின் சிறப்புப் பற்றியே கற்பனை ஓடிக்கொண்டிருக்கும். சிறிது காலம் சென்றபின் பண நெருக்கடி குடும்பக் கஷ்டங்கள் இப்படியெல்லாம் கற்பனை வரும். ஆனால் எல்லா எழுத்தாளர் விஷயத்திலும் இந்த அபிப்பிராயம் ஒத்து வருவதில்லை.

'தாயன்பு', 'குழந்தைப்பாசம்' இப்படியெல்லாம் ஏராளமான கதைகளை எழதிக் குவித்தான். அவன் எழுத்தில் அவனுக்கொரு குழந்தை இல்லாக் குறை நன்றாகப் பிரதிபலித்தது. வாசகர்கள் ரசித்துப் படித்தனர். அவன் தன் இதயத்தைக் கையால் பிடித்துக்கொண்டு எழுதினான். அவள் அவன் எழுதுவதைக் கண்ணீர் சிந்தியபடியே வாசித்தாள். தன் புருஷனின் மனக்குறை அவளுக்கு நன்றாகத் தெரியும். இயற்கையிலேயே அவனுக்குக் குழந்தைகளென்றால் உயிர். ஊர்க் குழந்தைகளை அவன் அள்ளி அணைக்கும்போது அவளிதயம் குமுறும். அவளுக்கு மட்டும் ஒரு குழந்தையிருந்தால்.....

விவாகமாகி மூன்று வருடங்களாகி விட்டன. ஒரு குழந்தையில்லை. ஒரு குழந்தை வேண்டுமென்ற நினைவு அவளைச் சதா வாட்டிக்கொண் டிருந்தது. அவளைவிட அதிகமாக அவன்தான் ஆசைப்பட்டான். தன் மனத்திலுள்ள ஆசையை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளுவதில்லை. ஆனால் எப்படியோ தன் புருஷனின் மனத்திலுள்ளதை அவள் அறிந்திருந்தாள். அதிர்ஷ்டக் கட்டையான கணவன்மேல் அவளுக்கு அனுதாபமேற்பட்டது.

'நீங்கள் இன்னொரு விவாகம் செய்து கொண்டாலென்ன?' என்று கேட்டாள். அவள் தொண்டை கனத்துப் போயிருந்தது.

'எனக்கு ஒரு மனைவி போதாதென்று உனக்கு யார் சொன்னார்கள்' என்றான் சிரித்துக் கொண்டே.

'நீங்கள் விளையாடுகிறீர்கள். நான் உண்மையாகத்தான் கேட்கிறேன்'.

'இவ்வித தண்டனைக்கு நான் என்ன குற்றம் செய்தேன்'. 'போதும் உங்கள் பரிகாசம் என்னை நீங்கள் மணந்து எந்த சுகத்தைக் கண்டீர்கள். நீங்கள் வைத்துக் கொஞ்சிக் குலாவ ஒரு குழந்தை.... ' மேலே அவளால் பேச முடியவில்லை. தொண்டை கம்மிவிட்டது. அவள் கண்கள் நீரைப் பெருக்கின.

அன்போடு அவள் கண்ணீரைத் துடைத்தானவன். அவனிதயமும் துடித்தது. 'பைத்தியமே, ஏன் சிறுகுழந்தையைப் போல் அழுகிறாய். இப்பொழுது ஒரு குழந்தைக்கு என்ன அப்படி அவசரம் வந்து விட்டது.'

'நீங்கள் உண்மையாகத்தான் கூறுகிறீர்களா?'

'உண்மையாகத்தான் கூறுகிறேன்'

'அப்போ உங்கள் கதைகள் கட்டுரைகளெல்லாம்.........'

'ஓ, அதைக் கொண்டா அனுமானிக்கிறாய். அப்போ யோகி சுத்தானந்த பாரதி காதல் கதைகளெல்லாம் எழுதுகிறாரே. அதைக் கொண்டு அவர் காதல் பித்துத் தலைக்கேறி அலைகிறாரென்று கூறிவிட முடியுமா? எழுத்தாளன் கற்பனை எல்லாத் திசைகளிலுமோடும். அவன் கற்பனையையும் வாழ்க்கையையும் ஒன்றுபடுத்திப் பார்க்க முடியுமா?'

அவன் சாதுரியமாக ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து முடித்தான். ஆனால் அவள் உள்ளம் சாந்தியடையவில்லை. அவன் உண்மையை மறைக்கிறானென்பதை அவள் திடமாக நம்பினாள். நாள்கள் ஓடிக்கொண்டிருந்தன. அவளுடைய மனக்கவலை அதிகரித்துக் கொண்டே வந்தது. அவள்மீது அவன் கொண்டுள்ள அன்பு அளவு கடந்தது என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும் தான். உயிருடனிருக்கும்வரை அவன் மறு விவாகம் செய்யமாட்டானென்பது அவளுக்குத் தெரியாத விஷயமல்ல. சிந்தனை செய்தபின் ஒரு முடிவுக்கு வந்தாள்.

மழை சோவென்று கொட்டிக் கொண்டிருந்தது. போர்வையை நன்றாக இழுத்து மூடிக் கொண்டு நித்திரை செய்தானவன். இரவு சுமார் பதினொரு மணியிருக்கும். கடைசியாக அவன் பாதங்களை நமஸ்கரித்துவிட்டு பொருமுமிதயத்தைக் கையால் தாங்கிப் பிடித்துக் கொண்டு வெளிக்கிளம்பினாள். சிலநாள் எங்கெல்லாமோ அலைந்தாள். சதி செய்யும் அவள் பருவமும், அழகும் கயவர் கண்களில் அவளைக் காட்டிக் கொடுக்கப் பார்த்தது. உலகம் இவ்வளவு பயங்கரமானது என்று வீட்டை விட்டு வெளிக்கிளம்பு முன் அவளறிந்திருக்கவில்லை. தற்பாதுகாப்புக்காகவே கோயிலுக்குள் சரண்புகுந்தாள். கோயிலுக்குள் புகுந்த அவளைச் சனங்கள் சுவாமியாக்கி விட்டார்கள். பாலசந்நியாசினியின் பெருமை எங்கெல்லாமோ பரவிவிட்டது. இப்பொழுது அவளிடம் குழந்தை வரம்பெற இளம்பெண்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றனர். எண்ணெயை காணாத பரட்டைத் தலையினால் அவளுக்குச் சடையம்மா என்ற பெயர் பக்த கோடிகளால் வழங்கப்பட்டது.

கணவனைப் பிரிந்து வாழ்ந்த ஐந்து வருட காலத்தில் சடையம்மாவுக்கு எவ்வளவோ அனுபவம் ஏற்பட்டுவிட்டது. ஐந்து வருடமாய்க் குழந்தையில்லாமலிருந்தவள் குழந்தைபெறுவதும், பத்து வருடமாயிருந்து குழந்தை பெறுவதும் இயற்கையென்று அவளுக்குத் தோன்றியது. தான் அவசரப்பட்டுத் தன் அன்புக் கணவனைப் பிரிந்து வந்தது எவ்வளவு மகா தப்பிதமான செயல் என்று இப்பொழுதுதான் அவளுக்குத் தோன்றியது. அந்த நடு ராத்திரியில் தன்னைத் தேடித் தன் அருமைக் கணவன் கொட்டும் மழையில் எவ்வளவு கஷ்டப்பட்டானோ என்ற நினைவு அவளுள்ளத்தே பேய்க்காற்றாய் வீசியது. ஒருவேளை என் பிரிவைச் சகியாமல் அவர் தற்கொலை செய்திருந்தால்.....? அவளை அறியாமலே அவள் வாய் ஐயோ என்றலறிவிட்டது.

அவள் அவனிடம் போகத் தீர்மானித்து விட்டாள். அவளை முந்தி அவளிதயம் பறந்தது. ஐந்து வருடம் அவனைப் பிரிந்து அமைதியாக வாழ்ந்தவள் போல் சென்று கொண்டிருந்தாள்.

காடுகளையும் மலைகளையும் தாண்டி புகையிரதம் வேகமாய் அலறிக்கொண்ட சென்றது. ஆனால் அது ஆமைபோல் ஊர்ந்து செல்வது போலிருந்தது அவள் பறக்குமுள்ளத்திற்கு. எப்படியோ பட்டணம் போய்ச் சேர்ந்து விட்டாள். கால்கள் அவள் பழைய வீட்டை நோக்கி வேகமாய்ச் சென்றன. தன் கணவன் உயிரோடு சுகதேகியாயிருக்க வேண்டுமே என்ற எண்ணமே அவள் உள்ளத்தில் நிரம்பியிருந்தது.

அவள் வீட்டையடையும் போது இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். வெளிக்கதவு சாத்தியிருந்தது. கதவைத் தட்டுவோமா என்று ஒரு கணம் சிந்தித்தாள். அடுத்த நிமிடம் தன் முன் தோன்றப் போகும் கணவனை எண்ணியதும் அவள் நெஞ்சு 'திக் திக்' என்றடித்துக் கொண்டது. பாதி திறந்திருந்த ஜன்னலால் வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. கதவைத் தட்டாமல் ஜன்னல் ஊடே உள்ளே எட்டிப் பார்த்தாள்.

அவள் கணவன் ஒரு சோபாவில் படுத்திருந்தான். அவன் மார்பில் ஒரு குழந்தை உட்கார்ந்து கொண்டு 'பாப்பா' என்று மழலை பொழிந்தபடியே தளிர்க் கரங்களால் அவன் கன்னங் களைக் கிள்ளிக்கொண்டிருந்தது.

'அப்பாவை ஒன்றுஞ் செய்யாதேடா போக்கிரிப்பயலே' என்று செல்லமாகக் கோபித்துக் குழந்தையின் கன்னங்களில் தட்டினாள் சோபாவின் விளிம்பில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு பெண். அவள்தான் அன்று சடையம்மாவிடம் சென்ற இளம் கர்ப்பிணி.

ஜன்னல் கம்பிகளைப் பிடித்திருந்த அவள் கரங்கள் தளர்ந்தன. கால்கள் தள்ளாடி அசைந்தன. தன் அன்புக் கணவனின் வாழ்வில் ஆத்ம திருப்தி கொண்டவள் போல் இருளில் அவள் சென்று மறைந்தாள்.

(நன்றி: 'சுதந்திரன்' சிறுகதைகள்)

## எத்தனை விவாக இரத்து இங்கு...?

சமூகப் பார்வை

பண்டைய ஈழ நாட்டின்
பழம்பெரும் யாழ்ப்பாணத்தில்
எங்கனும் கண்டறியாத வாழ்வு
இருந்திடக் கண்டோம் இன்று;
ஆண்டிற்கு ஐந்தாறென்று
அன்றிருந்த விவாக இரத்து
இன்று ஆண்டிற்கு பலநூறாக
பரிணமித்து விட்டதேனோ?
கண்டதும் காதல் கொண்டு
கனி மொழியாள் வீட்டை விட்டோடி
கொண்டவனைக் கைப்பிடித்து
குலமகள் தாலி யேற்று
மாதங்கள் 'ஆறு' ஆகு முன்னே
மனமுடைந்து வீடு வந்து
பெற்றவள் கதறி ஏங்க
பேதையாள் நஞ்சுண்டு மாளும்
உள்ளத்தை உருக்கும் கதை
உண்டிந்த நாட்டில் இன்று

★★★

மற்றவள், பிறி தொருத்தி
மனதினில் கவலை மேவ
பெற்ற அக் குழந்தையோடு
பெருங் கிணறதனில் வீழ்ந்து
பேதையும் மகவும் மாளும்
பெருங்கதை கேட்டோமன்றோ!

★★★

அடுத்தவள் அழகுப்பாவை
ஆறு நான்கு வயதுடையாள்
விட்ட அக் கணவனைத் தேடி
வீதி தோறலைந்து விட்டு
கட்டளை கணவனுக்கு ஒன்று
கடிதினில் 'கோட்டி'ல் வாங்க
மற்றவன் தலை மறைவாகிப் போக
மாதரசி கோட்டில் நின்று
மாதந் தோறும் அலையக் கண்டீர்!

★★★

உத்தமி பிறிதொருத்தி
உணர்ச்சியால் மாலை மாற்றி
பெற்ற அக் குழந்தைக்கு
பாலூட்ட வழியறியாது ஏங்கி
பற்றைக்குள் போட்டு விட்டு
பரிதவித்து நிற்கக் கண்டீர்!

★★★

இத்தனை கதையும் கேட்ட
இளவலோ வேறோர் பெண்ணை
இஷ்டம் போல் காதலித்து
இல்லற வாழ்வில் சொக்க
புதியவள் கர்ப்பமாகி ஏங்க
புண்ணியன் மனது நொந்து
குழந்தையை அழிப்பதற்கு
கொண்டு போய் மருந்து செய்ய
அத்தனை கொடிய நஞ்சு
அவள் உயிரையும் பறித்துவிடும்
விட்டானோ கலியாணத்தை என்றால்
விடமாட்டான் இந்தக் காளை
இஷ்டம் போல் இன்னொருத்தி தன்னை
இடை நடு பஸ்ஸில் முட்டி
கிட்ட கிட்ட மர்ந்து நாளும்
கிளுகிளு கதைகள் பேசி
துட்டனோ இப் பெண்ணைக் கூட்டி
துரிதமாய் பதிவு செய்வான்
கெட்டனள் மகளென்று கேட்டு
கட்டி வைத்து கதவைப் பூட்ட
காரிகை நஞ்சுண்டு மாள்வாள்

★★★

இப்படித் திருமணங்கள் இன்று
இஷ்டம் போல் நடப்பதாலே
பெற்றோரால் விரட்டப்பட்டு
பேதலித்து 'கோட்டில்' ஏறி
எத்தனை விவாகரத்து இங்கு
இடம்பெறக் கண்டீரன்றோ!

★★★

கற்பதை மடவார் பேணகாளையும் ஒழுக்கம் காக்க
பெற்றவள் பிள்ளைகளை பெரும்
பொறுப்புடன் வளர்த்து விட்டால்
இப்படி விவாக இரத்து
இங்கினி இடம்பெறாது

★★★

அழிந்திடும் தமிழர் பண்மை
அழியாது காக்க வாரீர்!
செத்தது தமிழ் பண்பாடே என்றால்
சீரழிவது எமது இனமே அன்றோ?
பெற்றோரே! உம் பொறுப்பு
பெரிதென உணர்ந்து கொள்வீர்
மற்றைய இனத்தார் எம்மை
மதித்திட வேண்டுமெனில்
தமிழர் தம் மனையறத்தை
தளைத்திடச் செய்வீர் நாளும்.

விகடகவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## 31ஆம் நாள் நினைவு நாளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்



திருமதி சண்முகம் காசுபதி அம்மா
(மட்டுவில் வடக்கு, பொற்கொல்லர் வீதி)
(நாச்சிமார் கோயிலடி)

மண்ணுலகில்
21 . 11 . 1917

விண்ணுலகில்
03 . 09 . 2007


03.09.2007 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்பு அம்மாவின் 31ஆம் நாள் நினைவு நாளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 03.10.2007 புதன்கிழமை யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயில் அன்னதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகிய அன்பு நெஞ்சங்களை அழைக்கின்றோம்.

அன்புடன்:
மகன், மகள்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 1010/6, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(8/53811)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கனகரத்தினம் சிவசோதிரத்தினம்

மலர்வு
13 . 12 . 1948

உதிர்வு
10 . 10 . 2006

அழியாது உன் நினைவு ஆண்டு ஒன்று போன போதும்
மண்ணுக்குள் சென்றாலும் கண்ணுக்குள் வாழ்கிறாய்
நீங்காது உன்நினைவு எம் நெஞ்சைவிட்டு
வேண்டுகின்றோம் என்றென்றும் இறைவனிடம் உன் சாந்திக்காக.....

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று (30.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

''அருள்நிலை''
சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

தாய், மனைவி (கனடா),
பிள்ளைகள் (கனடா).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



சிவனின் பாதத்தில்
01 . 09 . 2007

அன்னையின் மடியில்
08 . 09 . 1954

கடந்த 01.09.2007 சனிக்கிழமையன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்துரை சிவபாதம் A.I.B

(வாடிக்கையாளர் சேவை முகாமையாளர்- இலங்கை வங்கி,
2ஆம் மேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத் தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

இல.26(10),வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (66184)

திருமதி சி.தேவகி (மனைவி),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## முதியோர் அ.அட்டைகள் வந்தன

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் முதியோர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தோரில் ஒரு தொகுதியினருக்கான அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (207)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2007 ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சையில் 148 புள்ளிகள் பெற்று சித்தியடைந்த யா/புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனும் எமது அன்புச் செல்வனுமாகிய

**யோன்சன் கொலின்ஸ்**

மேலும் பல சிறப்புகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம். அவருக்கு ஊக்கமளித்த திருமதி ரஜித்தா சுரேஷ், அகஸ்ரின், வே.அன்பழகன் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
சந்திரன் சித்திரா
(பெரியப்பா, பெரியம்மா), சானு, கார்த்திகா,
கௌதமன், வினோ அண்ணா, அண்ணி,
அம்மம்மா குடும்பத்தினர்.

6/1, மீனாட்சி அம்மன் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(66297)


BE A DOCTOR




Eastern Europe
SPOT Admissions
Doctor of medicine MD
English Medium

Conducted by:
Prof. Igor Generalov
Head of the Department – Microbiology
COLOMBO - PATHE Academy 16th sep @ 10.00 a.m.
KANDY - Queens Hotel 18th sep @ 10.00 a.m.
COLOMBO - PATHE Academy 22th sep @ 02.00 p.m.

Recognized by SRI LANKA MEDICAL COUNCIL

உள்நுழையும் அனுமதி உத்தரவாதம்
அழைப்புக் கடிதம், அனுசரணைக் கடிதங்கள், வங்கிக் கணக்குக் கூற்று, விசா நேர்முகப் பரீட்சை எவையும் அவசியமில்லை

- PATHE ACADEMY அனுமதிக்கு விண்ணப்பித்த நாளிலிருந்து 20 நாட்களுக்குள் கற்கைநெறி அனுமதியும் விசா அனுமதியும் பெற்றுத்தரப்படும்.
- கல்விக்கான கடன்வசதி 5 நாள்களுக்குள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- தங்குமிட வசதி, இணையத்தள வசதி, பொழுதுபோக்கு வசதி, நூலக, ஆய்வுகூட வசதிகள், செயல்முறைக்கல்வி மற்றும் பரீட்சைக் கட்டணம் யாவும் இலவசம்.
- போக்குவரத்து, உணவு கட்டணங்கள், விசேட சலுகை அடிப்படையில்.
- இலங்கையிலும், உலகின் ஏனைய நாடுகளிலும் 200 இற்கும் மேற்பட்ட இலங்கை மாணவர்கள் படித்துப் பட்டம் பெற்றபின் தொழில் பார்க்கிறார்கள்.
- இலங்கைக்கான பிரதிநிதிகள் குழு உங்களுக்கு உதவவென 24 மணிநேரமும் காத்திருக்கின்றனர்.
- வெளிநாட்டவர்களுக்கு ஐரோப்பிய நாட்டில் கற்க மிகவும் பாதுகாப்பான இடம். (ஆசிய சிநேக சுற்றாடல்)
- பிரிட்டன், அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உட்பட உலகின் ஏனைய பல நாடுகளாலும் அங்கீகரிக்கப்பட்டது.
- ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் பருவகால விடுமுறை வேளையில் சென்று பகுதிநேர தொழில் பார்க்கும் வாய்ப்பு.
- பட்டம் பெற்ற பின்னர் ஐரோப்பாவில் குடியேற வாய்ப்பு.
- வருடாந்தக் கட்டணம் இரு தவணைகளில் செலுத்தும் வாய்ப்பு.

PATHE ACADEMY மூலம் அனுமதி பெற்ற மாணவர்கள் விபரம், ஏனைய தகவல்களை எமது இணையத்தள முகவரியிலும், அலுவலகத்தில் நேரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

NOW 0% INTEREST INSTALMENT PLAN BY MAJOR CREDIT CARDS

The programme is executed in par with ACT16 Exams syllabus

Transfer from other universities
Engineering | IT | Other courses also available

பதிவுகளை இன்றே செய்யுங்கள், அனுமதிபெற உடனடியாகவே பறந்து செல்லுங்கள் – தமிழில் விவரம்பெற :

PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel:5377752, 2502012, 2591271. www.patheacademy.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசு மழையில் நனையும் இந்தியக் கிரிக்கெட் வீரர்கள்!

முதலாவது ருவென்ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் பரிசு மழையில் நனைந்து வருகின்றனர். இவர்களுக்கு கிரிக்கெட் சபை தவிர, பல்வேறு மாநில அரசுகளும் பரிசுத்தொகையை அறிவித்துள்ளன.

**'ஜார்கண்ட் ரத்னா' டோனி!**

ருவென்ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியின் தலைவர் டோனிக்கு, 'ஜார்கண்ட் ரத்னா' விருது அளிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

'உலகக் கிண்ணத்தை வென்றால், டோனிக்கு ஆச்சரியமளிக்கும் பரிசு காத்திருக்கிறது' என்று ஜார்கண்ட் மாநில முதல்வர் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அதன்படி, ஜார்கண்ட் மாநிலத்தைச்




சேர்ந்த டோனிக்கு என்ன பரிசு கிடைக்கும் என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

**ஜோகிந்தர் ஷர்மாவுக்கு ரூ. 21 லட்சம் பரிசு**

இந்திய கிரிக்கெட் அணியின் சகல துறை வீரர் ஜோகிந்தர் ஷர்மாவுக்கு 21 லட்சம் ரூபா பரிசுத்தொகை அளிக்கப்படும் என்று ஹரியானா முதல்வர் புபிந்தர் சிங்க ஹூடா அறிவித்துள்ளார்.

ஜோகன்னஸ் பார்க்கில் நடந்த விறுவிறுப்பான ஆட்டத்தில், பாகிஸ்தானை 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ருவென்ரி - 20 உலகக் கிண்ணத்தை கைப்பற்றியத இந்திய அணி.

இந்த வெற்றி குறித்து ஹரியானா முதல்வர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், இளம் இந்திய வீரர்களின் இந்த வெற்றியானது, கிரிக்கெட்டுக்கு புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இறுதிப்போட்டியில் யூனிஸ்கான் மற்றும் மிஸ்பா உல் ஹக் ஆகிய முக்கிய விக்கெட்டுக்களை வீழ்த்திய ஜோகிந்தர் ஷர்மாவுக்கு 21 லட்சம் ரூபா பரிசுத்தொகை வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

இந்தியாவின் இளம் வீரரான ஷர்மா ஹரியானாவிலுள்ள ரோஹ்தக் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

**பதான் சகோதரர்களுக்கு தலா 7 லட்சம் ரூபா**

ருவென்ரி - 20 அணியில் இடம்பெற்ற பதான் சகோதரர்களுக்கு தலா 7 லட்சம் ரூபா பரிசுத்தொகை வழங்கப்படும் என்று வதோதரா கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது.

ருவென்ரி - 20 இந்திய அணியில் இடம்பெற்ற சகோதரர்களான இர்பான் பதான் மற்றும் யூசுப் பதான் ஆகியோருக்கு தலா 7 லட்சம் ரூபா பரிசாக வழங்கப்படுவதாக வதோதரா கிரிக்கெட் சங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பதான் சகோதரர்கள் வதோதரா நகரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் இப்பரிசுத் தொகை வழங்கப்படுகின்றது.

**பிரசாத், உத்தப்பாவுக்கு தலா 5 லட்சம் ரூபா பரிசு**

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் வெங்கடேஷ் பிரசாத் மற்றும் ரொபின் உத்தப்பா ஆகியோருக்கு தலா 5 லட்சம் ரூபா பரிசுத்தொகை வழங்குவதாக கர்நாடக முதல்வர் குமாரசுவாமி அறிவித்துள்ளார்.

இந்திய அணியின் இந்த வெற்றி குறித்து கர்நாடக முதல்வர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், ஒவ்வொரு இந்தியரையும் பெருமை கொள்ளச் செய்த இந்திய வீரர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும் இந்திய அணியில் இடம்பெற்றுள்ள கர்நாடக வீரர் உத்தப்பா, பந்து வீச்சுப் பயிற்சியாளர் வெங்கடேஷ் பிரசாத் ஆகியோருக்கு பரிசுத்தொகையை அவர் அறிவித்திருந்தார்.

**தினேஷ் கார்த்திக்கிற்கு 5 லட்சம் ரூபா பரிசு**

ருவென்ரி - 20 கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியில் இடம் பெற்ற தமிழக வீரர் தினேஸ் கார்த்திக்கிற்கு முதல்வர் கருணாநிதி 5 லட்சம் ரூபா பரிசு அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டியில் மாபெரும் வெற்றி பெற்றுள்ள இந்திய அணியில் இடம்பெற்ற தமிழக வீரர் தினேஷ் கார்த்திக்கை பாராட்டி, அரசு சார்பில் 5 லட்சம் ரூபா வழங்க முதல்வர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்திய அணியில் இடம்பெற்ற தங்கள் மாநில வீரர்களை கௌரவித்து அந்தந்த மாநில அரசுகள் பல்வேறு பரிசுகள் மற்றும் விருதுகளை போட்டி போட்டுக்கொண்டு வாரி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## அனைத்துலக அரங்கில்

**இந்திய அணிக்கு 12 கோடி பரிசுத்தொகை**

ருவென்ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு 12 கோடி ரூபாவை பரிசுத் தொகையாக வழங்குவதாக என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

முதலாவது ருவென்ரி - 20 கிண்ணத்தை இந்திய அணி கைப்பற்றிய அடுத்த சில நிமிடங்களிலேயே, அணிவீரர்களுக்கான பரிசுத் தொகையை அறிவித்தது கிரிக்கெட் சபை.

**சிக்சர் சிங்கம் யுவராஜ் சிங்குக்கு ஒரு கோடி ரூபா**

கிரிக்கெட் சபையின் அறிவிப்பின்படி சூப்பர் 8 போட்டிகளில் இங்கிலாந்துக்கு எதிராக 6 பந்துகளில் 6 சிக்சர்கள் அடித்து சாதனைபுரிந்த யுவராஜ் சிங்குக்கு ஒரு கோடி ரூபா பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

**ரூ.25 லட்சத்தில் வீடுகள்**

ருவென்ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணி வீரர்கள் 15 பேருக்கும் தலா 25 லட்சம் ரூபா பெறுமதியான வீடுகள் வழங்கப்படவுள்ளது.

ருவென்ரி - 20 கிரிக்கெட் போட்டியில்



டோனி

வென்று நாடு திரும்பிய இந்திய அணி வீரர்களுக்கு பரிசுகள் மலைபோல் குவிந்து கொண்டிருக்கின்றன.

இந்திய கிரிக்கெட் வாரியம் சார்பில், ஒவ்வொரு வீரருக்கும் தலா 80 லட்சம் ரூபா வீதம் 15 பேருக்கும் 12 கோடி ரூபா பரிசாக வழங்கப்பட்டது.

இதுதவிர, உலகக் கிண்ணத்தை வென்ற அணியில் இடம்பெற்ற 15 வீரர்களுக்கும் 25 லட்சம் ரூபா மதிப்பிலான வீடு அவர்கள் விரும்பும் இடத்தில் வழங்கப்படும் என்று சகாரா நிறுவனம் அறிவித்துள்ளது.

உத்தரப் பிரதேசம், குஜராத், அரியானா, மராட்டியம், கர்நாடகா, கேரளா, டெல்லி,

**டிலான்**

தமிழ்நாடு ஆகிய மாநில அரசுகளும் தங்களது மாநில வீரர்களுக்கு போட்டி போட்டுக் கொண்டு பரிசுகளை வாரி வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

**ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து!**

ருவென்ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு ஜனாதிபதி பிரதிபா பாட்டீல், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோர் வாழ்த்து தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில், இந்திய அணி அனைவருக்கும் பெருமை சேர்க்கும் விதமாக சிறப்பாக விளையாடியது. இந்த வெற்றி தொடர வாழ்த்துக்கள் என்று குறிப்பிட்டிருந்தார்.

அதேபோல் பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில், இந்த வெற்றியின் மூலம் இளைஞர்களுக்கு புதிய உத்வேகம் கிடைத்துள்ளது என்று தெரிவித்திருந்தார். ★

# கற்றதைப் பின்பற்றும் சமுதாய நோக்குள்ள மனிதனை உருவாக்கும் சாயி கல்விமுறை

**சிறுவர் மலர்ச்சிக் கல்விக் கண்காட்சி மானிப்பாயிலுள்ள சத்தியசாயி பாடசாலையில் இன்று தொடக்கம் ஒக்ரோபர் 2ஆம் திகதி வரை நடைபெறுகிறது.**

தொழில்நுட்பம், விஞ்ஞானம் என்பன அதி தீவிர முன்னேற்றம் அடைந்தாலும், மனிதன் சந்திரனில் காலடி வைத்தாலும் மரபு அலகுகள் பொறியியல் மூலம் இழையங்களையும் ஒரே மாதிரியான உயிரினங்களும் பெருக்கினாலும் கணனித் தொடர்பாடல் மூலம் உலகமே சுருங்கினாலும், மனிதனிடத்தே மனித நேயமோ, அமைதியோ, ஆனந்தமோ பெருகவில்லை. மாறாக அவை குன்றி அமைதியின்மை, முரண்பாடுகள், வன்மையாதிக்கம், வறுமை எல்லாமே அதிகரித்துவிட்டன. ஸ்ரீசத்தியசாயி பாபா இதற்கெல்லாம் தற்போதைய கல்வி முறையும், பெரியோர்களின் பொறுப்பற்ற நடத்தையுமே காரணம் என்று கூறியுள்ளார். அதையே நிவர்த்தி செய்ய வேண்டுமாயின் மனித விழுமியங்கள் இணைந்த கல்வி முறையே, எல்லா கல்வி நிறுவனங்களிலும் அறிமுகப்படுத்தி நடைமுறைக்கு கொண்டுவர வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். கூறியது மட்டுமல்லாமல் மனிதவிழுமியங்கள் அடிப்படையால் கொண்ட கல்விமுறையை முன்பள்ளி முதல், பட்டதாரிப் பின் படிப்பு வரை எவ்வாறு புகட்டலாமென்று தனது கல்வி நிறுவனங்கள் மூலம் உலகலாமறிய நடத்திக் கொண்டிருக்கிறார். அவரின் பெயரைக் கொண்ட கல்வி நிறுவனங்கள் இந்தியாவில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளில் பல வருடங்களாக இயங்கி வருகின்றன. இதன் பெறுபேறே பல கல்விமான்கள் ஆராய்ச்சி செய்து, மிகவும் உகந்த கல்வி முறை என்று அறிக்கை விடுத்துள்ளார்கள். உதாரணமாக டென்மார்க், ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், சம்பியா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளிலுள்ள அரசாங்கங்களே சத்திய சாயி கல்வி முறையையும் கல்வி நிறுவனங்களையும் பாராட்டி இக்கல்வி முறையை தமது நாடுகளிலும் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். இக்கல்விமுறைக்கு நோக்கம், தத்துவம், பாடத்திட்டம், கற்பிக்கும் முறை, தரம், தன்மைகுறையாது தொடர்ச்சியான மதிப்பீடு, ஆராய்ச்சி ஆகியன உண்டு.

**சத்தியசாயி கல்விமுறையின் நோக்கம்**

மனிதஉன்னதம், அறிவுத்திறன், செயற்றிறன் ஆகிய மூன்றையும் விருத்தி செய்வதே ஆகும். இதனால் முழுமையான ஆளுமைவளர்ச்சியை உண்டு பண்ணி கல்வியின் நிறைவு ஒழுக்கம் என்ற நிலைமை அடைவதே ஆகும்.

இதன் தத்துவம் எஜுகெயர் (Educare) ஆகும். எஜுகெயர் அல்லது மனிதமேம்பாட்டுக்கல்வி என்ற மனிதனின் உள்ளிருக்கும் தெய்வத்தன்மையை வெளிக்கொணர்வதேயாகும். இதன்வெளிப்பாடு மனம், வாக்கு, காயத்தில் ஒருமையும் தூய்மையும், அடிப்படை 5மனித மேம்பாடுகளான சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை, சிந்தனை, சொல், செயலில் பரிணமிப்பதுமேயாகும். இக்கல்வி முறை மெய்ப்பொருளை அறிவதிலேயே தீவிர செயற்பாட்டை தூண்டும் தன்மை கொண்டது. கற்றதை வாழ்க்கையில் பின்பற்றும் சமுதாய நலன் நோக்கு உள்ள உன்னத மனிதனை உண்டாக்கும்.

கற்பிக்கும் முறையில் அமைதியிருக்கை, பிரார்த்தனை, தியானம், கதை கூறல், குழுப்பாட்டு, குழு முயற்சிமீள் வலியுறுத்தல், மதிப்பீடு ஆகியவை அடங்கும். இது நடைமுறையிலிருக்கும் கற்பிக்கும் முறையைக் குழப்பாது இணைந்து கொள்ளக்கூடியது. கற்றல், கற்பித்தல், கல்வியுடன் சேர்ந்த ஏனைய செயற்பாடுகள் எல்லாவற்றிலும் மனித மேம்பாடுகள் இணக்கம் காண்கின்றன. வீடும் கல்வி நிறுவனமும் விழுமியங்கள் பரிணமிக்கும் சூழலைக் கொண்டிருக்க வேண்டும். இக்கல்வி முறையில் குருவின் பங்குக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. மாணவனை நோக்குடையதாகக் கொண்டிருந்தாலும் குருவையே மையமாகக் கொண்டுள்ளது. குருவிடத்தில் இயற்கையாக செயற்படும் தன்மைகளே மாணவரில் பதியுமென்பதுதான் மையச் சிந்தனை. குரு தீவிரமாக

**வைத்தியகலாநிதி இ.கணேசமூர்த்தி**

ஆன்மீக சாதனையில் ஈடுபாடு கொள்ள வேண்டும். தெய்வீக அன்பைச் சொரியவேண்டும். மாணவர்களிடத்தில் மௌனமாகவே மனித மேம்பாடுகள் தூண்டப்பட்டுவிடும். இதயத்திலிருந்து இதயத்திற்கு பரிமாறப்படும்.

இக்கல்விமுறை பல நிலைகளில் நடைமுறையிலுள்ளன. சிறுவர் மலர்ச்சிக் கல்வி (பால விகாஸ்) மனிதமேம்பாட்டுக்கல்வி, சத்திய சாயி பாடசாலை, கல்லூரி பல்கலைக்கழகம் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி நிறுவனம் ஆகியவை வெவ்வேறு நிலைகளாகும். இக்கல்விமுறை செவ்வனே மிளிர்வதற்கு மாணவர்கள் பாடசாலையுடன் சேர்ந்த விடுதிகளில் வசிக்கவேண்டும். இதனால் சாதாரண உலகியற் கல்வியையும் ஆன்மீகக் கல்வியையும் இலேசாக இணைக்கலாம். அநேகமாக வீட்டுச் சூழல் தடையாக இருப்பதையே அறிகிறோம். சுருங்கக் கூறின் இக்கல்வி முறை நவீனமயப்படுத்தப்பட்ட குருகுலக் கல்வியே என்பதை உணரலாம். ★

# பிள்ளைக்குரிய அன்போடு இறைவனை நேசிக்க அழைக்கின்றாள் புனித திரேசாள்

சுண்டுக்குளி புனித திரேசாள் ஆலயப் பெருவிழா இன்று ஞாயிறு தினத்தன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.

இம்மாதம் 21ஆம் திகதி ஆரம்பமான மேற்படி ஆலய நவநாள்கள் இன்று திருவிழாத் திருப்பலியுடன் நிறைவடைகின்றது இன்று காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

சிறுமலர் என்று அழைக்கப்படும் குழந்தை இயேசுவின் புனித் திரேசாள் குழந்தைப் பருவத்திலேயே இறை அன்புப் பாசத்தால் ஈர்க்கப்பட்டு தனது 16ஆவது வயதில் உலகைத் துறந்து கார்மேல் கன்னியர் மடத்தில் வாழ்ந்தாள். அங்கு வாழ்ந்த ஆறு ஆண்டுகளில் இறை அன்பின் உச்ச நிலையை அடைந்தாள். கார்மேல் கன்னியர் மடத்தில் அவளுடைய முன்மாதிரியான வாழ்வைக் கண்டு வியந்த தலைமைத் தாயார் அவளது வாழ்கை வரலாற்றை அவள் கைப்படவே எழுதும்படி கட்டளையிட்டார். புனித திரேசம்மாள் தனது கைபட எழுதிய அந்த வாழ்க்கை வரலாற்றுச் சித்திரம் ஓர் ஆன்மாவின் வரலாறு என்னும் தலைப்பில் புத்தகமாக்கப்பட்டது. பிரெஞ்சு மொழியில் எழுதப்பட்ட மேற்படிப் புத்தகம் சில வருடங்களில் உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது. இறைவனை பிள்ளைக்குரிய அன்போடு நேசிக்கும் சிறந்த வழியே உன்னதமான வழி அது எல்லோரும் எளிதில் கடைப்பிடிக்கக்கூடிய சிறந்த வழி என்று அழகாகக் கூறி அந்த புனித திரேசாள் அதனையே வாழ்ந்து அதனையே தனது வாழ்வுச் சரித்திர சுருக்கமாக ஓர் ஆன்மாவின் வரலாறு என்னும் பெயரில் தந்துள்ளார்.

1873ஆம் ஆண்டு பிறந்து 1888ஆம ஆண்டு கார்மேல் மடத்தில் சேர்ந்த 1897ஆம் ஆண்டு இறந்துபோன புனித திரேசாளுக்கு 1923ஆம ஆண்டு முத்திப்பேறு பெற்ற பட்டமும் 1925ஆம் ஆண்டு புனிதர் பட்டமும் வழங்கப்பட்டது. மறைபோத நாடுகளின் பாதுகாவலியாக 1927ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இவர் இன்று மிகவும் புகழ்பெற்ற ஒரு புனிதராக விளங்குகிறார்.

1897ஆம ஆண்டு புனிதர் திரேசாள் தனது வாழ்க்கையின் கடைசி நாள் தினத்தன்று மரணப் படுக்கையில் இருந்த வண்ணமே என்னை முழுவதும் அன்புக்கு கையளித்தமை பற்றி நான் சிறிதளவும் வருந்தவில்லை. அவரை நான் நேசிக்கிறேன் என்தேவனே உம்மை நேசிக்கிறேன் என்ற தனது கடைசி வாக்கியத்தைப் சொல்லி முடித்த பின இவ்வுலகை விட்டு நித்திய பேரின்பத்தில் மரணமானாள்.

என் மரணத்திற்குப் பிறகு ஒரு றோசா மலர்மாலை பொழிவேன். இவ்வுலகில் நன்மை செய்வதிலேயே என் விண்ணுலக வாழ்வைக் கழிப்பேன். உலகம் முடியும் மட்டும் எனக்கு ஓய்வு இராது என்று தன்மரணப்படுக்கையில் உறுதிமொழி கூறிய புனித திரேசாய் இன்றும் உலகை பாதுகாக்க பரிந்துரைத்து வருகிறாள்.

எமது மண்ணில் பயமும் பதட்டமும், துன்பமும், துயரமும், வெறுப்பும், வேதனையும் இன்னும் தொடர்ந்திருக்கும் வேளையில் நீதி யோடு கூடிய நிரந்திரத் தீர்வினை எம் மண்ணுக்கும் மக்களுக்கும் தர புனித திரேசளிடம் வேண்டுவோம்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 20 - 09 - 1934



மறைவு 31 - 08 - 2007

## அமரர் முத்துவேலு பத்மாவதி

அன்னார் நோயுற்றிருந்த வேளையிலும் மரணச்செய்தி அறிந்த வேளையிலும் எமது துயரில் பல்வேறு வழிகளிலும் பங்கேற்ற அனைவருக்கும், யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலையில் நோயுற்றிருந்த வேளையில் 04 ஆம் வாட்டில் கடமையாற்றிய வைத்திய நிபுணர், உதவி வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய ஊழியர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று [30.09.2007] ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். (66262)

தகவல்: க.சதானந்தன்,
'ஆனந்த வாசம்',
இணுவில் மேற்கு, இணுவில்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## தாவீது அந்தோனிப்பிள்ளை



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் தாவளை இயற்றாலை, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட தாவீது அந்தோனிப்பிள்ளை (28.09.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி தாவீதின் மகனும் செல்லாச்சியின் அன்புக் கணவரும் செல்வசிங்கம்(சுவிஸ்), ஜான்சி, தாசன்(ஜேர்மனி), மாலா, வசந்தா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வண்ணமகள்(சுவிஸ்),சிவராசா, சிவாஜினி (ஜேர் மனி), வேலாயுதம், கரன்(சுவிஸ்), றீற்றா, புஸ்பம், டோமினிக், தவம், இந்திரா ஆகியோரின் மாமனும் அன்னத்தின் சகோதரனு மாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.09.2007)ஞாயிற்றுக்கிழமை அவரது வரணி இல்லத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு முற்பகல் 10மணியளவில் யாழ்.பரி.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.5, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (66341)

தகவல்:
டோமினிக் (மருமகன்).

## மாசிலாமணி தங்கச்சியம்மா
(ராசாத்தியம்மா)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் காரைக்கால் வீதி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி தங்கச்சியம்மா (27.09.2007) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மாசிலாமணியின் அன்பு மனைவியும் ரமேஸ் (ஜேர் மனி), சுரேஸ் (தனியார் சிற்றூர்திச் சேவை), ரஜனி ஆகியோரின் அன்புத் தாயும், உதயகுமார், மொனிஸ்ரா, மேனகா ஆகியோரின் மாமியும், பிரசன்னா, அபினயா, பிருந்தா, ஆகாஷ், கவின்ற் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (29.09.2007) சனிக்கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காரைக்கால்,
இணுவில். (66339)

தகவல்:
குடும்பத்தினர்.

# முதலாம் வருட நினைவு தினம்

பிறப்பு 25 - 07 - 1929



மறைவு 11 . 10 . 2006

அமரர்
## இராமலிங்கம் அருளானந்தம்
(ஓய்வுபெற்ற வாழைச்சேனை காகித ஆலைப் பொறியியலாளர்)

பிறப்பு 20 . 06 . 1933



மறைவு 24 . 03 . 2006

திருமதி
## அருளானந்தம் அபிராமிப்பிள்ளை

**திதி: 01.10.2007**

*குன்றா இளமையுடனும் மாறா புன்சிரிப்புடனும்*
*மங்காத பாசத்துடனும் கொள்கைதனில் பிடிப்புடனும்*
*இறுதிவரை வாழ்ந்து எங்களையும் வாழவைத்த....*

எங்கள் அன்புப் பெற்றோரின் முதலாம் ஆண்டுத் திவசத்திலும், மதிய போசனத்திலும் நாளை (01.10.2007) திங்கட்கிழமை கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

V.M. றோட்,
பருத்தித்துறை. (66293)

மகள்: செல்வராசா சாந்தகுமாரி
(செல்வா மின்ஒளி உரிமையாளர்)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19. முருகேசர் ஒழுங்கை,நல்லூர். (66115)

## மானிப்பாய் வர்த்தக சங்கம்

தங்கள் வியாபார ஸ்தாபனத்தின் உரிமையாளர், ஊழியர்கள் யாவரையும் பதிவு செய்யும் நடவடிக்கைகள் எமது அலுவலகத்தில் நடைபெறுகின்றன. தயவுசெய்து யாவரும் தொடர்பு கொள்ளவும்.

வர்த்தக சங்கக்
காரி யாலயம்,
மானிப்பாய். (66316)

ப. சிவகுமார்
தலைவர்,

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிக்கு விசேட கழிவு உண்டு. கால்நடை தீவனங்களும் விற்பனைக்குண்டு
S.சிவகுமாரன்,
ஆடியபாதம் வீதி,கல்லியங்காட்டுச் சந்தி. (66320)

## இதய அஞ்சலி



எமது ஆருயிர்நண்பன்
குகராஜின்
பாசமிகு தாயார்
**பொன்னுராஜ் இன்பகுமாரி**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் சொல்லொணாத் துயரடைகிறோம். இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(66325) நண்பர்கள்.

**Allince Francaise de Jaffna**
83, Palaly Road, Kantharmadam,
Jaffna, Srilanka
Phone: 0212228093
Email: alliancejaffna @ yahoo.com

LEARN FRENCH THE FRENCH WAY

## பிரெஞ்சு மொழி வகுப்புக்கள்

*''யாழ்ப்பாணத்தில் பிரெஞ்சு மொழி கற்க ஓர் அரிய சந்தர்ப்பம்''*

**பிரெஞ்சு மொழி கற்க விரும்பும் அனைவருக்குக்குமான (மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில்புரிபவர்கள், ஆர்வமுள்ளோர்) புதிய வகுப்புக்கள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. கட்டணம் மற்றும் ஏனைய விவரங்களை நேரில் அல்லது தொலைபேசியின் ஊடாக கேட்டறியலாம். (ஆங்கில அறிவு அவசியமில்லை)**

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும்விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக்கொள்ளலாம்.
★ **றாஜீவ்,** குளப்பிட்டி வீதி. ஆனைக்கோட்டை.
T.P.No:222 2867
222 3529 (66320)

## வான் விற்பனை

நல்ல நிலையிலுள்ள TOYOTA 53XXX தொடர் இலக்கம் உடைய வெள்ளைநிற TOW NACE VAN விற்பனைக்குண்டு.
தொடர்பு:
36, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (66324)

## தளபாடங்கள் அன்பளிப்பு

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் சகாயபுரத்திலுள்ள சகாய மாதா மாலை நேர கல்வி நிலையத்திற்கு வாங்கு மேசை, போன்ற தளபாடங்களை வழங்கியுள்ளது.

அத்துடன் அப்பியாசக் கொப்பிகளையும் மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்துள்ளது.

(202135)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### ஐ.மனோகரன்

எமது பாடசாலையில் 23 வருடங்கள் ஆசிரியராக, உப அதிபராகக் கடமையாற்றி இன்று தனது 60வது அகவையில் ஓய்வு பெற்றுச் செல்லும் உபஅதிபர் அவர்களை வாழ்த்துகின்றோம். (66135)

உபஅதிபர்
யா/தாவடி இ.த.க.
பாடசாலை

யா/ தாவடி இ.த.க.பாடசாலை
அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள்.

# சபிண்டீகரண அழைப்பு

மண்ணில் 10 . 03 . 1951



விண்ணில் 15 . 09 . 2007

கடந்த 15.09.2007 சனிக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் இல்லத்தின் ஒளிவிளக்கு

## அமரர் இராஜநாயகு இராமலட்சுமி

அவர்களின் சபிண்டீகரண கிரியைகள் இன்று (30.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

270, கே.கே.எஸ் .றோட்,
யாழ்ப்பாணம். (66326)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருமதி பொன்னுராஜ் இன்பகுமாரி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன் னுராஜ் இன்பகுமாரி (24.09.2007) திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிர்வாதம் லோறன்ஸ், மேரி மக்கலின் தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி பொன்னுச்சாமி தம்பதியினரின் மருமகளும் பொன்னுராஜின் அன்பு மனைவியும் Dr.கலைச்செல்வி, குகராஜ் (முகாமைத்துவ இறுதியாண்டு மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத்தாயும் தேவரட்ணம், கொன்சன் டைன்ட், விஜயகுமாரி, கிளமன்டைன்ட் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஜரிஸ், புஸ்பம், தேவதாஸ், ராணி, திரு.திருமதி சிவமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் மேரிதிரேசா, மரியதாஸ், சொலமன், இராசமணி, திரு.திருமதி.குமாரசாமி, செல்லக்கண்டு, தேவி, பாலசுப்பிரமணியம், பங்கிராஸ், சந்திரா, மணி, லில்லி ஆகியோரின் மருமகளும், சுதர்சன், தவயோகராசா, டெனி, அருள், பிரியா, சிவதர்சினி, சிறி, சுதர்சினி, மகிந்தன், ரம்யா, சுபாகர், அஜந்தன் ஆகியோரின் மாமியும் அஞ்சலியின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (30.09.2007) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் தேவர்சபை (A.O.G) ஊழியர்களால் நல்லடக்க ஆராதனைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் யாழ்ப்பாணம் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே 0212225456
46, கோவில் வீதி,
யாழ்ப்பாணம் (66323)

தகவல்:
குடும்பத்தினர்.



## நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உளமார்ந்த நன்றிகள்

நல்லூர் வருடாந்த மகோற்சவகாலத்தில் அடியார்களின் நன்மை கருதி பருத்தித்துறை வீதியில் அமைக்கப்படும் ''நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல்'' இம்முறையும் (2007) சிறப்புற அமைவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நல்லைக்கந்தன் தண்ணீர்ப் பந்தல் நிர்வாகத்தின் சார்பில் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர்களில் அரசஅதிபர், நல்லூர் பிரதேச செயலர், இராசதானி நல்லூர் கிராமசேவையாளர், யாழ்.மாநகர சபையினர், யாழ். மின்சார சபையினர், யாழ்.நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தினர் ஆகியோருக்கு முதலில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மற்றும், வெளிநாடுகளிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் பணஉதவிகள் செய்தவர்களுக்கும்; பந்தலை அழகுற அமைத்துத் தந்தவர்களுக்கும்; பந்தலின் செயற்பாடுகள் யாவற்றிற்கும் பலவழிகளிலும் உதவிய அயலவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்*
*ஞாலத்தில் மாணப் பெரிது''*

தொ.பே: 0212226638
547, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (66270)

நல்லைக் கந்தன்
தண்ணீர்ப் பந்தல் நிர்வாகத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## தமிழர்களின் பிரதிநிதிகள் யார்?

"தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள்தான் என்ற பேச்சுக்கே இடமில்லை. எந்த அமைதிப் பேச்சுக்களிலும் நாடாளுமன்றத்தில் தமிழ் - முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைத்துக்கொள்வோம்" - இப்படி அறிவித்திருக்கின்றது மஹிந்தரின் அரசு.

விடுதலைப் புலிகளைத் தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகளாக - அதிகாரபூர்வ பேராளர்களாக - ஏற்றுக்கொண்டுதான் 2002ஆம் ஆண்டில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அமைதிப் பேச்சுக்கள் வரை அனைத்தையும் அப்போதைய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு முன்னெடுத்தது. அதன் பின்னர் 2005 நவம்பரில் ஆட்சிக் கட்டில் ஏறிய மஹிந்த ராஜபக்ஷ அரசு கூட அந்த அடிப்படையில்தான் 2006 இல் 'ஜெனிவா I', 'ஜெனிவா II' பேச்சுக்களில் புலிகளோடு கலந்துகொண்டது.

அரச அதிகாரத்தில் இருந்தபோது ஈழத்தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளோடு சமஷ்டி அடிப்படையிலான தீர்வு ஒன்றைக் காண்பது குறித்து ஆராய்வதற்கு இணங்கிய ஐக்கிய தேசியக் கட்சி இப்போது சமஷ்டி விவகாரத்தைக் கைவிட்டுவிட்டதாகக் குத்துக்கரணம் அடிக்கின்றது.

புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு ஜெனிவா வரை பேச்சுக்குச் சென்ற மஹிந்த அரசு புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவத்தை நிராகரிக்கின்றது. புலிகளின் 'பயங்கரவாத'த்தை நூறு வீதம் அடக்கிய பின்னர்தான் விரும்பிய திட்டத்தை தீர்வு விவகாரமாகத் தமிழர் மீது திணிப்பது குறித்துக் கனவு காண்கின்றது அது.

இவை எல்லாம் எவற்றின் வெளிப்பாடுகள்? பிரதிபலிப்புகள்?

கவிஞர் கண்ணதாசன் கூறி வைத்தமை போல் '*உன் நிலைமை கொஞ்சம் இறங்கிவந்தால் உன் நிழலும் கூட மிதிக்கும்*' என்ற மாதிரியான விவகாரம்தான் இது.

நேற்று இப்பத்தியில் நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி இராணுவச் சமச்சீர் நிலையில் புலிகளின் பலம் வீழ்ந்துவிட்டதாகக் கருதும் சிங்களம், புலிகளை நிழலாக நினைத்து மிதிக்க எண்ணுகிறது. பெரும்பான்மைச் சிங்களவர்களின் இரண்டு பிரதான கட்சிகளினதும் போக்கில் வெளிப்படுத்தப்படும் பேரினவாத மேலதிக்க - மேலாண்மை - திமிரின் பின்னணி இதுதான்.

நிழல் எது, நிஜம் எது என்பது நிரூபணமாகும் போது இந்தச் சிந்தனையில் - சித்தாந்தப் போக்கில் - நிச்சயம் சடுதியான மாற்றம் வரும் என்பதும் திண்ணம்.

பலமான நிலையில் இருந்துகொண்டு அந்தப் பலத்தில் உருவான பேரம் பேசும் வலுவோடுதான் பேச்சு மேசைக்குச் செல்லவேண்டும் என்பதில் புலிகளின் தலைமை உறுதியாக இருப்பதின் கா[illegible] நியாயத்தை - சிங்களத்தின் தற்[illegible] நிலைப்பாட்டிலிருந்து தமிழர்கள் நனகு உணர்ந்து கொள்ள முடியும்.

அடுத்தது - தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ பிரதிநிதிகள் யார் என்பது குறித்து சிங்களத்தின் பக்கத்தில் கேள்வி எழுப்புபவர் யார் என்று நோக்கும் போது சிரிப்புத்தான் வருகின்றது.

ஐ.தே.கட்சியின் தலைவர் ரணிலின் காலில் ஒட்டிக்கொண்டு நின்று எம்.பியாகி கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்காகத் தலைகீழாக நின்று பிரசாரம் செய்து ஜனாதிபதித் தேர்தலில் ரணில் தோற்றபின்னர் - அடுத்த வாரம் - 'உதயன்' - 'சுடர்ஒளி'க்கு அளித்த விசேட பேட்டியில் ரணிலின் கையைப் பலப்படுத்தும் படி மன்றாடிய கெஹலிய ரம்புக்வெலதான் புலிகளின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதித்துவம் குறித்து இப்போது நியாயம் பிளக்கிறார்.

ஐ.தே.கட்சி பட்டியலில் போட்டியிட்டு, எம்.பியாகி இப்போது ஆளும் தரப்புக்குக் குத்துக்கரணம் அடித்து ஜனாதிபதி மஹிந்தருக்காக வக்காலத்து வாங்கும் ரம்புக்வெல, தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் குறித்துப் பேசுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

2004ஏப்ரலில் நடந்த பொதுத் தேர்தலின் அடிப்படையில் தெரிவான அரசுதான் இப்போது ஆட்சிப்பீடத்தில் இருக்கின்றது.

ஈழத்தமிழர்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகள் புலிகள்தாம் என்பதையும் இனப்பிரச்சினைக்கான எந்தப் பேச்சு முயற்சியும் அவர்களோடுதான் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும் சர்வதேசத்துக்கும் ஜனநாயக வாக்கெடுப்பு மூலம் உறுதிப்படுத்தும் ஒரு தேர்தலாகத்தான் அத்தேர்தலைத் தமிழர் தாயகம் பயன்படுத்தியது. அந்த ஒரே கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்குத் தமிழர் தாயகத்தின் 90 வீதத்துக்கும் அதிகமான மக்கள் வாக்களித்தமையும் அதற்காகத்தான். தமிழர் தாயகத்திலிருந்து தெரிவான 23 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 22 பேர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராக அமைந்தமையும் இந்தப் பின்புலத்தில்தான்.

இந்த நிலைப்பாட்டுக்கு முரண்பட்டு மாறாக நின்றபடியால்தான் தமிழர் தாயகத்தில் சுமார் நான்கு தசாப்த காலம் மதிக்கப்பட்டு வந்த வீ.ஆனந்தசங்கரி போன்றோரை ஒரு சில ஆயிரம் வாக்குகளோடு தமிழர் தாயகம் நிராகரித்துத் தூக்கி வீசி அரசியல் அனாதைகளாக்கியது. இப்போது அரசுத் தலைவர் மஹிந்தரின் சால்வையில் தொங்கிக் கொண்டும் புதுடில்லிக்கு சாமரம் வீசிக்கொண்டும் ஐ.தே.கட்சியிடம் கெஞ்சி மன்றாடி அறிக்கை விட்டுக்கொண்டும் இருக்கும் இத்தகையயோரை தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பிரதிநித்துவப்படுத்த முயற்சிப்பது கடந்த பொதுத் தேர்தலில் தமிழர் தாயகம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்திய தீர்ப்புக்கு முரணான முழுக் குளறுபடியாகும்.

மக்களின் உண்மையான பிரதிநிதிகள் குறித்து ரம்புக்வெல போன்றோர் பேசுவது வேடிக்கை. அதிலும் ஈழத்தமிழர்கள் தங்களின் ஏக - அதிகாரபூர்வ - பிரதிநிதிகள் யார் என்பதை தென்னிலங்கைச் சிங்கள அரசே தனது சட்டதிட்டங்களுக்கு அமைய தனது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வாக்குப் பெட்டிகளை வைத்து நடத்திய கடைசிப் பொதுத் தேர்தலில் உறுதியாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்திய பின்னர், அத்தீர்ப்பை நிராகரித்து அதற்கு வேறுபட்ட விதத்தில் அமைச்சர் ரம்புக்வெல புதுக்கதை பேசுவது வேடிக்கையிலும் வேடிக்கை.

# வர்த்தகத்துறைக்கு தெற்காசியாவில் மிகவும் மோசமான இடம் இலங்கை!

### சர்வதேச ஆய்வின் முடிவில் தெரிவிப்பு

கொழும்பு,செப்.30

உயர்ந்த வரி விதிப்பு, அதிகார வர்க்கத்தின் சிவப்பு நாடா கெடுபிடி ஆகியவை காரணமாக தெற்காசியாவில் வர்த்தகத்துறையில் இலங்கை மிக மோசமான இடம் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றது.

சர்வதேச நிதிக் கூட்டமைப்பு (ஐ.எவ்.ஸி.) என்ற மையம் நடத்திய ஆய்விலிருந்து இவ்விவரம் தெரியவந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதிலும் உள்ள 178 நாடுகளில் வரி விதிப்பு, வியாபாரத்தைத் தொடங்குவதில் உள்ள சிக்கல்கள் - செலவுகள், தொழிலாளர் சட்டங்கள், சட்ட நடவடிக்கைப் பிரச்சினைகள் ஆகியவற்றை ஆராய்ந்தபின்னர் இலங்கைக்கு 101 ஆவது இடத்தை அது வழங்கியிருக்கின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் 89 ஆவது இடத்திலிருந்த இலங்கை இப்போது இன்னும் கீழிறங்கி 101 ஆவது நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது.

மொத்தத் தர நிலையில் இந்தப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய சில நாடுகள் இலங்கையை விட முன்னிலை வகிக்கின்றன.

மாலைதீவு 60ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 76 ஆவது இடத்திலும் உள்ளன.

ஆனாலும் இப்பிராந்தியத்தைச் சேர்ந்த பங்களாதேஷ் 107 ஆவது இடத்திலும்,நேபாளம் 111ஆவது இடத்திலும், பூட்டான் 119 ஆவது இடத்திலும், இந்தியா 120 ஆவது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 159 ஆவது இடத்திலும் இருக்கையில் அவற்றுக்கு முன்பாக இலங்கை நிற்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

"இலங்கையில் வர்த்தகம், வியாபாரம் போன்றவற்றை ஆரம்பிப்பதில் அனுமதிப்பத்திரம் பெறல், வரிவிதிப்பு நடைமுறைகள் என்பன பெரும் இடைஞ்சலாக உள்ளன." - என்று இத்துறை சார்ந்த விற்பன்னர் ஒருவர் தெரிவிதிருக்கின்றார். (சி)

## இணுவில், அளவெட்டிப் பகுதிகளில் இளைஞர்கள் இருவரின் சடலங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், செப்.30

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில் இணுவில் மற்றும் கந்தரோடைப்பகுதிகளில் மீட்கப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று பிற்பகல் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இணுவில் பகுதியில் மீட்கப்பட்ட சடலம் அதே இடத்தைச் சேர்ந்த பால சுப்பிரமணியம் சனாதன் (வயது 23) என அடையாளம் காணப்பட்டது. இவர் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்தார்.

குறித்த இளைஞன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை நல்லூருக்கு சென்றார் எனவும், பின்னர் அவர் இனந்தெரியாதோரால் நல்லூர்ப் பகுதியில் வைத்து கடத்தப்பட்டதாக மாலையில் தமக்கு தகவல் கிடைத்ததாகவும் - இன்று(சனிக்கிழமை) காலையில் இணுவில், மருதனார்மடம் வீதியில் ரயில் நிலையத்துக்கு சமீபமாக சடலமாக காணப்பட்டதாகவும் அவரது தந்தை தெரிவித்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை:-

**அளவெட்டியில் மற்றொரு சடலம்**

கந்தரோடை வீதியில் அளவெட்டி தெற்கில் வயல்கரைப் பக்கத்தில் இருந்து 30 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

சடலத்தின் தலையில் வெட்டுக் காயங்களின் தழும்புகள் காணப்பட்டன.

அடிகாயங்கள் மற்றும் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட சடலத்தை மல்லாகம் நீதிவான் திருமதி. ச.இளங்கோவன் சம்பவ இடத்தில் பார்வையிட்டார்.

பிரேத பரிசோதனைகளுக்காகவும், இனம் காண்பதற்காகவும், சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (1-50-15-78-68)

## சுன்னாகம், அளவெட்டிப் பகுதிகளில் வீடு புகுந்து இரு இளைஞர்கள் கடத்தப்பட்டனர்

யாழ்ப்பாணம்,செப்.30

சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவன் ஒருவன் அவரது வீட்டில் வைத்து ஆயுத முனையில் கடத்தப்பட்டுள்ளார்.

வீட்டுக்குள் புகுந்த ஆயுததாரிகள் அங்கிருந்தவர்களை ஆயுதமுனையில் அச்சுறுத்தி, ஆனந்தராட்ணம் கஜன் என்ற மாணவனைக் கடத்திச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மாணவனின் பெற்றோர் சுன்னாகம் பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

**பெற்றோரைத் தாக்கி விட்டு...**

இதேவேளை -

அதே இரவு 9.30 மணியளவில் அளவெட்டி கணேசபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்த ஆயுததாரிகள், மற்றோர் இளைஞனையும் கடத்தி சென்றனர். இராசதுரை பிரபா (வயது 23) என்பவரைக் கடத்துவதற்காக அவரது வீட்டுக்குள் புகுந்த ஆயுததாரிகளை அவரது தந்தையும் தாயும் எதிர்த்தனர். அவர்கள் இருவரையும் தாக்கி விட்டு மகனை கடத்தி சென்றனர்.

மயக்கமுற்ற நிலையில் இருவரும் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். அங்கிருந்து தாய் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார். (அ-1-68)

## தென்மராட்சி கல்வி வலயத்தில் புலமைப்பரிசிலில் 91 மாணவர் சித்தி

யாழ்ப்பாணம்,செப்.30

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்றுமுன்தினம் தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளில் வெளியிடப்பட்டன.

கிடைத்த பெறுபேறுகளின் பிரகாரம் வலயத்தில் 91 மாணவர்கள் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றியோரில் 10.58 சதவீதத்தினர் சித்தி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் இடப்பெயர்வு, தற்போதைய நாட்டு சூழ்நிலை போன்ற காரணங்களுக்குள்ளும் பரீட்சையில் பத்துக்கும் மேற்பட்ட சதவீதத்தினர் சித்தியடைந்திருப்பது பாராட்டுக்குரியது என வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். பாடசாலை ரீதியாக சித்திபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு.

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை - 30, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்-10, கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்- 05, நாவற்குழி ம.வி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி, மட்டுவில் கமலாசனி வித்தி. தலா - 4, கைதடி விக்னேஸ்வரா வித்தி., அல்லாரை அ.த.க.பாடசாலை., மட்டுவில் தெற்கு அ.மி.த.க.பா., கைதடி நுணாவில் அ.த.க. பா. தலா - 3

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, உசன் இராமநாதன் ம.வி, நுணாவில் அமீர்தாம்பிகை வித்தி, கல்வயல் சமுண்கானந்தா வித்தி.- தலா 2

வரணி ம.வி., கச்சாய் மந்துவில் ஸ்ரீ பார்வதி வித்தி, மிருசுவில் அ.த.க.பா., சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி., குடமியன் அ.த.க.பா., போக்கட்டி றோ.க.த.பா., நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தி, மட்டுவில் வடக்கு அ.த.க.பா., மீசாலை கமலாம்பிகை வித்தி., வரணி வடக்கு அ.த.க.பா., கைதடி எழுதிடல் அ.த.க.பா. - தலா 1 (207)

## முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கு செல்வோருக்கு

யாழ்ப்பாணம்,செப்.30

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அலுவலகத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத் தேர்வுக்கு செல்வோர் உரிய காலத்திற்குள் விண்ணப்பித்து பாதுகாப்பு அனுமதியைப் பெறவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. இயன்றவரை நேரகாலத்துடன் போக்குவரத்து ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறும் யாழ்.செயலக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார். (அ-203)

### நாளை

| | |
|---|---|
| புரட்டாதி - 14 | திங்கட்கிழமை 01.10.2007 |
| திதி : பஞ்சமி | பிற்பகல் 02.19 |
| நட்சத்திரம் : | கார்த்திகை |
| சுபநேரம் | : 12.02 - 01.32 |
| ராகுகாலம் | : 07.32 - 09.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.30

காரைநகர் பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபையின் செயலாளர் இரா. லோகநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் பொ.அ. அருமைநாயகம் சிறப்பு விருந்தினராகவும் யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார், காரைநகர் உதவி அரச அதிபர் ஆர்.ரி. ஜெயசீலன் ஆகியோரும் கலந்து கொள்வர். (1-202-250)

* * *

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவன வட பிராந்திய இணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சிறுவர் மலர்ச்சிக் கல்வி என்னும் தலைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் செவ்வாய்கிழமை வரை மானிப்பாய் சோதி வேம்படி ஒழுங்கையில் அமைந்துள்ள சத்தியசாயி பாடசாலையில் கண்காட்சி நடைபெறும்.

காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை கண்காட்சி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.(1-203)

* * *

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சிறுவர் கலைக்கூட சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை யாழ். றக்கா வீதியில் அமைந்துள்ள புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் திருமதி கனகாம்பிகை சிவராஜாவும் சிறப்பு விருந்தினராக புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலைய அதிபர் அருட்சகோதரி மரியஜீவந்தியும், கௌரவ விருந்தினராக திருமறைக் கலாமன்ற நிர்வாக சபை உறுப்பினர் எவ்.யூல்ஸ்கொலினும் கலந்து சிறப்பிப்பார்கள். (50)

* * *

இருபாலை கிழக்கு பாரதி கலா மன்றம் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மன்ற விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

ச.பரமானந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1-203)

# உடையார்கட்டில் விமானக்குண்டு வீச்சு

கிளிநொச்சி,செப்.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடை யார்கட்டுப் பகுதியில் குடியிருப்புக்கள் மீது நேற்றுக்காலை 'கிபிர்' விமானங்கள் இரு தடவைகள் குண்டு வீச்சு தாக்குதலை நடத்தின.

காலை 7 மணிக்கும், 8 மணிக்கும், வன்னி வான் பரப்பில் வட்டமிட்ட இரு 'கிபிர்' விமானங்கள் உடையார்கட்டில் குடியிருப்புகளின் மீது தாக்குதல்களை நடாத்தின. இத்தாகுதலில் ஐந்து வீடுகள் தேசமடைந்தன. பொதுமக்கள் சிலர் சிறு காயங்களுக்குள்ளானார்கள்.

இதேவேளை -

புதுக்குடியிருப்புக்கு வடமேற்கு பகுதியில் தேவிபுரம் பகுதியில் அமைந்திருந்த கடற்புலிகளின் பயிற்சி முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்றும், அந்த முகாம் முற்றாக நாசமாகியது என்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (அ-1)


பொருளியல்
N.B. கஜீதரன்
Paper Class
நாவலர் - Sat, Sun 3-4 pm
விக்னா - Sat, Sun 1-2 pm
Shamrock - Mon, Fri 3-4 pm
Brain Power - Tue, Thur 4-5 pm

PHYSICS
Radiation
ஆரம்பம்:- 03.10.2007 புதன் (புதன்கிழமைகளில் 3.00 - 4.00 pm)
By:-K.Selvan
New Science Center

ஓம் ஸ்ரீ சாயிராம
"சிறுவர் மலர்ச்சிக்கல்வி" கண்காட்சி
அனைவரையும் அழைக்கின்றோம்
இடம்:-சத்திய சாயி பாடசாலை சோதிவேம்படி ஒழுங்கை,மானிப்பாய்
காலம் :- ஞாயிறு,திங்கள்,செவ்வாய் (இன்று ஆரம்பம)
நேரம் :- காலை 09.00 மணி முதல் - 04.00 மணி வரை
பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிறுவனம்-வடபிராந்திய இணைப்புக்குழு

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
புதிய பிரிவுகள் ஆரம்பம்! 01.10.07 (Mon)
ICT [G.C.E(O/L)] Paper Class
GIT [G.C.E(A/L)] Paper Class
Certificate in Internet & E-Mail

துரித தபால்கள், பொதிகள் சேவை
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருள்கள் உணவுப் பொருள்கள் உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணி நேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL MONEY TRANSFER
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் தொ.பே. 021 222 7835
48, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310


## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில் விரிவுரையாளராக கடமையாற்றிய சு.செந்தூரன் அவர்களின் தந்தை

### சுந்தவனம் சுந்தரலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து கொள்கிறோம். ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கிறோம்.

Institute of Information Studies, Nelliyady, Karavaddy. (66349)

பயிற்சி இயக்குநர், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### எட்வேட் திரேசம்மா

மலர்வு 30.09.1930 உதிர்வு 30.09.2006

அன்பின் ஒளி விளக்கே!
எங்கள் குடும்பத்தின் தலைவியே!
நீங்கள் மறைந்து ஓராண்டு ஆனாலும்!
உங்கள் அன்பு முகம் மறையாது!

உங்கள் பிரிவால் துயருறும்:-
மகள், மருமகன், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

15, யாழ்பாடி வீதி, யாழ்ப்பாணம், (66349)

## சகல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- அரசமைப்புத் திருத்தம் கொண்டு வரப் பட்ட பின்னரும் அதனையும் மக்கள் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அங்கீக ரிக்க வேண்டும். (அ)

## அரசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கம் மோதல்களைக் கைவிட்டு இயல்பு நிலையை ஏற்படுத்தினால் வன்முறைகளைத் தாம் கைவிடுவதாக விடுதலைப் புலிகள் தெரிவித்ததாக கூறிய ஆயர் இரண்டு தரப்புக்களும் மோதல்களைக் கைவிடவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும் தொடரும் வன்முறைகளால் அப்பாவி பொதுமக்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் - என்றார் ஆயர். (அ-5)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பான ஒருவர் மட்டும் இருந் தால் போதுமானது. அவரிடம் கிராம சேவை யாளர் மற்றும் படை அங்கத்தவர்கள் கொண்ட குழு படிவத்தை கையளிக்கும்.

மக்கள் இதற்காக தமது வழமையான பணிகளை தவிர்க்கத் தேவையில்லை. இவ்வாறு பலாலி தலைமையக ஊடகத் துறை பொறுப்பதிகாரி கப்டன் தரியோ உதயனுக்கு நேற்றிரவு தெரிவித்தார். (அ-1)


DAY Class ஆரம்பம் 01.10.2007 திங்கள் காலை 7.30
கணக்கீடு
P.பகீரதன்
வகுப்புகள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை நடைபெறும். நேரம் : காலை 7.30 - 9.00 வரை
Note
1) அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.
2) ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
3) அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
4) ஒரே கட்டணத்தினுள் Paper Class உம் இடம் பெறும்.
5) கட்டணம் ரூ.200
Business College (யாழ்.மத்திய கல்லூரி அருகில்)

A/L DAY Class
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்: 01.10.2007 Mon. 8 a.m
Eco. - N.B. கஜீதரன்
Acc. - P.பகீரதன்
B.stu. - K.முரளி
Tam. - K.கீர்த்திராஜன்
Hin.Cul - S.பத்மராஜா
Log. - P.காமர்
Geo. - N.பாபு
Pol.Sc. - K.ரொபின்சன்
Dram. - M.மதுரன்
A/L 2008, 2009 கலை, வர்த்தகப் பிரிவுகள்
நாவலர் ஆனைப்பந்தி யாழ்.

HOT IN OUR POT
Original 650B UPS
PowerTree
P4 PGA 478 Socket Mother Boards
HP Laserjet 1020
Canon LaserShot LBP 2900
HP Deskjet D1360 InkJet
EPSON Lq300+ II Dotmatrix
HP All in One Deskjet Printer (Printer, Scanner, Photocopy & Fax)
CanoScan Lide25 Scanner
விற்பனைக்கு பிந்திய சேவைகள் வடமராட்சி மற்றும் தென்மராட்சி உள்ளடங்கி உங்கள்வீட்டிலேயே
Brand New Intel Pentium 4 with Brand New Monitor Just 39900/-
Hard Disk 40, 80, 160 & 250
SDRAM, DDR1 & DDR2 Ram
AGP, PCI EXPR 128,256 & 512
இல்லை என்று எதுவுமில்லை
Assembled Pcs with Intel Pentium 4 3.0/2m, Intel Pentium D Dual Core 3.0, Intel Core 2 Duo & Intel C2D Extreme
All type of Mother Boards like Intel Original, Asus, AsRock, Foxconn, Biostar & Gigabyte
Casings, CRT & LCD Monitors
Branded Pcs IBM & HP
ALL WITH GENUINE WARRANTY
347, K.K.S Road, Jaffna 0773134737


# ரஞ்சித் அடிகளாரின் இறுதி நிகழ்வில் பல தரப்பினரும் பங்குபற்றி அஞ்சலி

மன்னார், செப் 30

வெள்ளாங் குளம் பகுதியில் கடந்த 26ஆம் திகதி கிளைமோர் தாக்குதலில் சொல்லப்பட்ட அருட்திரு நீக்கிலாப் பிள்ளை பாக்கியரஞ்சித் அடிகளாரின் பூத வுடல் சோகமே உருவெடுத்து நின்ற மக் கள் கூட்டம் அலை மோத நேற்று நண்பகல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

மன்னார் புனித செபஸ்தியார் பேரால யத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பூதவுடல் அங்கு நேற்றுக் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட திருப்பலியின் பின்னர் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வல மாக எடுத்துச் செல்லப்பட்டது.

மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு ஜோசப் திருப்பலியை ஒப்பு கொடுத்தா.ர் அதனை அடுத்து இரங்கல் உரைகள் இடம்பெற்றன.

மன்னார் அரச அதிபர் ஏ.நிக்கொலஸ்பிள்ளை கண்ணீர் மல்க இரங்கலுரையாற்றினார்.

### ஜயலத்தும் வந்திருந்தார்

எதிர்கட்சித் தலைவர் சார்பில் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவநாதன் கிஷோர் ஆகியோரும் பங்கேற்றனர். (அ-1)


SHAMROCK
LOGIC PAPER CLASS
Miss N. B.A.(hons) (Phil)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி செல்லம்மா நடராசா



நல்லூரைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா நடராசா நேற்று(29.09.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, சண்முகராஜா (கோண்டாவில்), ஜெயராசா (சண்டிலிப்பாய்), குணவதி, நவராஜா (G.T.Z) நவரட்ணராஜா (கச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கனகராஜா, யோகேஸ்வரி, ராஜேஸ்வரி, சரவ... பவான், தயாநிதி, பத்மாவதி ஆகியோரின் மாமியாரும் வி... ராஜா (கனடா), கமலராஜா (சுன்னாகம்), பத்மராஜா (ஜேர்மனி) ஜெயராணி, கமலராணி (கனடா), சதீஸ்குமார் (பிரான்ஸ்), ... வதனா (கொலன்ட்), ரதிவதனா (கோண்டாவில்), சுரேஸ்கு... (பிரான்ஸ்), ரமேஸ்குமார் (லண்டன்), சுஜாதா (லண்டன்) பிரதீபன் (அளவெட்டி), பிரசன்னா, விஜி (கண்டி), பிரபு, கவி... டுஷ்யந்தினி, கஜவதனி, நந்தகுமார், அஜிலா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இல. 158/1 கோவில் வீதி யாழ்ப்பாணம் (... கோவில் வீதி) ... யில் நடைபெற்று. பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*158/1, கோவில் வீதி, யாழ்ப்பாணம்*

தகவல்
பிள்ளைகள்.

### திருமதி இராசையா செல்வராணி



தெல்லிப்பழையை சொந்த இடமாகவும் நாச்சிமார் கோயிலடி நவாலி வடக்கை த... போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசையா செல்வராணி 27.09.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் எல்லுப்போலை இராசையா அவர்களின் அன்பு மனைவியும் ஜெயரூபன், சசீந்தன், அஜந்தா, மயூரன் ஆகியோரின் அன்புத் தாயும், நா.பூபாலசிங்கம், நா.பரமலிங்கம், நா.சண்முகலிங்கம், நா.செல்வரத்தினம், க.கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், க.முருகானந்தன், ஜெ.திருமகள் ஆகியோரின் மாமியாரும், பானுயன், விதுஷா, ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.09.2007) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2மணிக்கு தகனக்கிரியைக்காக நவாலி ஆரியம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*நாச்சிமார் கோயில் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.* (66365)

தகவல்
இ.ஜெயரூபன், இ.மயூரன் (பிள்ளைகள்)

### செல்லையா இராசேந்திரம்

(இளைப்பாறிய தபால் அதிபர்)

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாக கொண்டவரும் கனடாவை வதிவிடமாகக் கொண்டவருமான செல்லையா இராசேந்திரம் 26.09.2007 புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - தையல்முத்த தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற மகேஸ்வரியம்மாவின் அன்பு கணவரும், செல்லம்மா, இராசமுத்து ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நளினி(அமெரிக்கா), நிமலன்(கனடா), ரவிகரன் (மக்கள் வங்கி,கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருக்குமார், வசந்தா, அனோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹரிஸ், தனேஸ், அர்ச்சனா, அபிஷேக் ஆகியோரின் அன்பு பேரனும், மற்றும் காலஞ்சென்றவர்களாகிய பாலசிங்கம், இராசசேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*இல. 8-5/2, ஹம்டன் லேன், வெள்ளவத்தை கொழும்பு - 06*

தகவல்
ரவிகரன்(மகன்) (மக்கள் வங்கி, கொழும்பு) தொ.பே.0776218478).
நிமலன் (மகன்) தொ.பே 0786623732

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.